Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 13 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 26 (30.10.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:30

த பெனின்சுலா பார்மசி
THE PENINSULA PHARMACY
சகல விதமான மருந்து வகைகள், பால் மா வகைகள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு அவசியமான பொருட்கள் என்பவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
த பெனின்சுலா பார்மசி,
518, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
No.518, Hospital Road,
Jaffna.

## படையினரின் தாக்குதலை கண்டித்து இன்று குடாநாட்டில் பூரண துக்கம்!

யாழ்ப்பாணம் —

புத்தூர் பகுதியில் நேற்றுமுன் தினம் அதிகாலை வீட்டுக்குள் புகுந்து பெண்ணொருவரை பாலியல் வல் லுறவுக்குட்படுத்த முயன்ற படையினரின் செயலைக் கண்டித்து நடத்தப்பட்ட பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தின்போது, படையினர் நடத்திய கண் மூடித்தனமான தாக்குதலைக் கண் டித்து, யாழ். குடாநாட்டில் இன்று பூரண துக்கதினமாக அனுஷ்டிக்கு மாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கேட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானதுடன் மேலும் 15 பேர் வரை காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து இன்று யாழ். குடாநாடு முழுவதும் வர்த்தக நிலையங்கள், அரச சார் பற்ற, (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தலைமை அதிகாரியை நியமிப்பதில் சிக்கல் நிலை நீடிப்பு!

கொழும்பு —

இலங்கை கடற்படையின் இரண் டாவது நிலை தளபதி பதவியான தலைமை அதிகாரி பதவிக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து சர்ச்சை கள் எழுந்திருப்பதாகவும் - இதில் 5 பேரின் பெயர்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடற்படையின் மூன்றாவது நிலை தளபதியாக இருந்த வசந்த கரன்ன கொட கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்து இரண் டாம் நிலை தளபதியாக இருந்த றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம கடும் அதிருப்தியடைந் தார்.

தனக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய பதவியுயர்வு நிராகரிக்கப் பட்டது தொடர்பாக அவர் உயர் நீதி மன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தைக் கலைத்து விட்டு சோமவன்ச யுத்தகளம் செல்வாரா?




## கேள்வியெழுப்பும் அனுரா மஹிந்தவையும் சாடுகிறார்!

கொழும்பு —

இராணுவத்தினரின் சீருடையைக் களைந்துவிட்டு அவர்களை கலைத்து விட வேண்டும் என்று கூறிய சோமவன்ச அமரசிங்க துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு யுத்தத்துக்குச் செல்வாரா என்று, வெளிவிவகார அமைச்சர் அனுர பண்டாரநாயக்க, ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நிட்டம்புவவில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போது அவர் தனது உரையில் - இராணுவம் இல்லை (12 ஆம் பக்கம் பார்க்க)



## எரிபொருள் விலைகள் விரைவில் அதிகரிக்கும்!

கொழும்பு —

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருட்களின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

மைய தற்போது 80 ரூபாவாக இருக்கும் பெற்றோல் 82 ரூபாவிற்கும், 50 ரூபாவாகவுள்ள டீசல் லீற்றர் 59 ரூபாவாகவும், ரூபா 30.50 ஆக இருக்கும் மண்ணெண்ணெய் 57

## கோழிகள் இறக்குமதிக்கு இலங்கை அரசு தடை!

கொழும்பு —

ஆசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் பற்றிய பீதி பரவி வருவதால் கோழி இறக்குமதிக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு பறவைக் காய்ச்சல் நோய் மனிதர்களைத்

## மர்ம நபர்களின் தாக்குதலில் வீதியால் சென்றவர் படுகாயம்!

### மீசாலையில் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

மீசாலையில் வீதியால் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் டிருந்தபோதே இனந்தெரியாதவர்கள் முகமூடி அணிந்து கொண்டு வாள்,

கொழும்பு —

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருட்களின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்து வருவதனால் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கவுள்ளதாக பெற்றோலியக் கூட்டத்தாபனம் தெரிவித்துள்ளது.

டீசலின் விலையை 9 ரூபாவினாலும், பெற்றோலின் விலையை 2 ரூபாவினாலும், மண்ணெண்ணெயின் விலையை லீற்றர் 26 ரூபா 80 சதத்தினாலும் அதிகரிக்குமாறு எரிபொருள் விலை மறுசீரமைப்பு குழு அரசுக்குகு பரிந்துரை செய்துள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைக்கமைய தற்போது 80 ரூபாவாக இருக்கும் பெற்றோல் 82 ரூபாவிற்கும், 50 ரூபாவாகவுள்ள டீசல் லீற்றர் 59 ரூபாவாகவும், ரூபா 30.50 ஆக இருக்கும் மண்ணெண்ணெய் 57 ரூபா 50 சதமாகவும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பிற்கமைய நாட்டின் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்காமைக்காக, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி நிவாரணம் வழங்குகிறது.

எனினும், கடந்த ஜனவரியில் இருந்து வழங்க வேண்டிய நிவாரணத் தொகையான 1, 400 கோடி ரூபா இன்னும் நிலுவையில் இருப்பதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் பற்றிய பீதி பரவி வருவதால் கோழி இறக்குமதிக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு பறவைக் காய்ச்சல் நோய் மனிதர்களைத் தாக்கியதில் ஆசிய நாடுகளில் பலர் உயிரிழந்தனர். இப்போது சீனாவில் 12 வயதுச் சிறுமி ஒருவர் இந்த நோய்க்குப் பலியாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, வியட்நாம் ஆகிய நாடுகளிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்த நோய் பரவி உள்ளது. இந்த நோய் பற்றிய பீதி உலகம் முழுவதும் பரவியுள்ளது.

இந்த நோய் பற்றிய பயம் காரணமாக இலங்கை அரசு கோழி இறக்குமதிக்கு தடைவிதித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

மீசாலையில் வீதியால் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் மீசாலை வடக்கு மீசாலையைச் சேர்ந்த இராஜகுலசிங்கம் (வயது 41) என்பவரே காயமடைந்தவராவார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது–

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மேற்படி குடும்பஸ்தர் வேலைக்குச் சென்றுவிட்டு மதிய உணவு உண்பதற்காக வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோதே இனந்தெரியாதவர்கள் முகமூடி அணிந்து கொண்டு வாள், தடிகள் போன்றவற்றால் தாக்கிவிட்டு தப்பிச்சென் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு திரும்பினார் கப்பல் கப்டன் மகாலிங்கம்!

கொழும்பு —

சோமாலியாவில் கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்டு 101 நாள் பணயக் கைதியாக இருந்த இலங்கையரான செல்லத்துரை மகாலிங்கம் (வயது 58) நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமானத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசி ஆலைத் தொழிலாளி அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

அம்பாறை —

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்றில் அரிசிஆலை ஒன்றில் பணியாற்றும் தொழிலாளர்களில் ஒருவரான நவரட்ண ஹெட்டிகெதர என்பவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் நவரட்ன ஹெட்டிகெதர முதியன்சலாகே அபயரத்ன (வயசு38) அக்குறனையைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தம்பட்டையில் திருமணம்புரிந்து தனது மனைவியுடனும், குழந்தையுடனும் வசித்து வந்த இவர் சுனாமியில் இருப்பிடத்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை அதிகாரிகளை கடத்த முயற்சி!

திருகோணமலை —

திருகோணமலைக்கு வடக்கே புல்மோட்டை வீதி 11ஆம் மைல்கல் கோபுரம் எனுமிடத்தில், வீதியில் உடற்பயிற்சி செய்து கொண்டுவந்த கடற்படை அதிகாரிகள் இருவரை நான்கு பேர் கொண்ட இனந்தெரியாத குழுவினர் கடத்துவதற்கு மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

நேற்றுமாலை 6.15 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருதாவது–

மேற்படி வீதியில் இரண்டு கடற்படை அதிகாரிகள், வழமையான தமது உடற்பயிற்சியை மேற்கொண்டு வந்தவேளை, அவர்களை வழிமறித்த நான்கு பேரடங்கிய இனந்தெரியாத குழுவினர் அவ்விருவரையும் கடத்த முயற்சித்த வேளை இரு பகுதியினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதேவேளை, அவ்வீதியால் இராணுவ மோட்டார் சைக்கிள் படையணி வந்தது. இதனால் கடத்த வந்தவர்கள் அந்த வீதியிலிருந்து தப்பிச்சென்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரில் ஜோன்.பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையாகவுள்ள இராணுவ காவலரண் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு தாக்குதல் நடத்தியதில் காவலரணின் முன்பகுதி சிறு சேதத்திற்குள்ளானபோதும் இராணுவத்தினர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் இராணுவக் காவலரண்மீது (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளிகளுக்கு]

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 8144

ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 - காலை 10.00
மாலை 5.00 - இரவு 9.00



# புத்தூரில் படையினரின் தாக்குதல்; வர்த்தகர் சங்கம் கடும் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

புத்தூர் கிழக்கில் அப்பாவிப் பொது மக்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் பயங்கரமாகத் தாக்கியதுடன் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அப்பாவி இளைஞர் ஒருவர் உயிரிழந்தும் பலர் காயமடைந்ததையும் இட்டு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் படையினரின் இவ்வாறான தாக்குதலுக்கு கடும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

படையினரின் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த பொதுமக்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்வதுடன் இப்படியான நிகழ்வுகள் இனிமேலும் நடைபெறாதிருப்பதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு விசாரணைக்குழுவை நியமித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டு - ஒருவர் உயிரிழந்ததற்கும் பலர் காயமடைந்தமைக்கும் எமது வர்த்தக சமூகத்தின் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடியை இன்று பறக்கவிட்டு அஹிம்சை வழியிலும், அமைதி வழியிலும் வர்த்தக சமூகத்தின் அனுதாபத்தையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கும்வண்ணம் யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றோர் விபரம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்து கல்விகற்கின்ற வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

பரிசு இலக்கங்கள்

1 ஆம் பரிசு - 2630

2 ஆம் பரிசு - 4842

3 ஆம் பரிசு - 2222

ஆறுதல் பரிசுகள்

(1) 8101 (2) 7191 (3) 9745 (4) 7074 (5) 8298 (6) 7969 (7) 9845 (8) 0619 (9) 3800 (10) 5714

பரிசுக்குரியவர்கள் யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியில் பரிசுப் பொருட்களை பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தினரின் தாக்குதலுக்கு ஈழவேந்தன் எம்.பியும் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

புத்தூரில் படையினர் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு முயற்சி, அதனை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டத்தை படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிப்பிரயோகம் செய்து நசுக்க முற்பட்டதால் அப்பாவி இளைஞன் ஒருவன் உயிரிழந்து மேலும் பலர் காயமடைந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராணுவத்தினர் மக்கள் மீது தாக்குதல் நடத்தியவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்தில் நின்றபோதும் அவர்களால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.

இந்த சிங்கள வெறித் தாக்குதலுக்கு சிங்கள இராணுவத்தின் முறைகெட்ட செயற்பாடே காரணமென்பது வலியுறுத்தப்படவேண்டியது.

ஈழத்து மக்களைப் பொறுத்தவரையில் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா அடுத்து யாழ்ப்பாணத்திலும் 20 ஆண்டுகளுக்கு மேலாக தாங்கமுடியாத இன்னலுக்குள்ளாகி முகாம் வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

தமிழகத்தில் ஈழத்து ஏதிலிகளின் அகதிவாழ்க்கை தொடர்ந்தவண்ணமுள்ளது. அத்தோடு, கடல் கடந்த நிலையில் 50 நாடுகளிலும் ஈழத் தமிழ்மக்கள் ஏதுமற்ற ஏதிலிகளாகத்தான் வாழ்கிறார்கள். இந்த அகதி வாழ்க்கையை தமது மண்ணிலும் சரி வேற்று மண்ணிலும் சரி தமிழர் அனுபவிக்கவேண்டுமா என்பதற்கு நாம் விரைவில் விடைகண்டேயாக வேண்டும்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி நல்லூர் கோயில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் யாழ்ப்பாண படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் நீண்டநேரம் உரையாடியபோது - தன்மானத்தோடும் உண்மையான அமைதியோடும் வாழவேண்டும். இங்கு பலாத்காரமாக குடியேறி படைத் தாக்குதல் நடத்துகின்ற சிங்களப் படை உடனடியாக வெளியேறவேண்டும் எனக் கூறினேன். இதற்கு அவர் பதில் தரவில்லை.

இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்ற நாம் சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேறும்வரை இந்த நாட்டில் தமிழருக்கு நிலையான பாதுகாப்பும், அமைதியும் ஏற்படப் போவதில்லையென்று தமிழ்ச்செல்வன் கூறிய கருத்தையும் இங்கு நினைவுகொள்ள விரும்புகிறோம்.

விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்படும் தமிழ்மக்கள் அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்கு நாம் விளக்கம் கூறுவது கடினம்.

நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இந்த நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படப்போவது உறுதி. தமிழருக்கு எதையும் தாங்கும் இதயம் உண்டு. சிங்கள இனம் எமது எதிர்த் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்குமா என்பது பெரும் கேள்வியாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடுவில்கோட்ட சைவத் திருமுறைவிழா பதினைந்தாம் திகதிக்கு ஒத்திவைப்பு!

உடுவில் —

நாளை நடைபெறவிருந்த உடுவில் கோட்ட சைவத் திருமுறை விழா ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 3,4,9,10 ஆகிய திகதிகளில் போட்டிகள் நடைபெறும் எனவும் நவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் திருமுறைவிழா நடைபெறுமெனவும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் தெரிவித்துள்ளார்.

உடுவில் கோட்டப் பாடசாலைகளிடையே பின்வரும் நேர அட்டவணையில் சைவத்திருமுறை விழா போட்டிகள் நடைபெறும்.

நவம்பர் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு தரம் 1-5 - தொண்டுபடும் செயன்முறை(இறுதி), மனனமுற்றோதல், பண்ணிசை (அரைஇறுதி) ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

நவம்பர் 3 ஆம் திகதி- தரம் 6-13- தொண்டுபடும் செயன்முறை (இறுதி) ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

நவம்பர் 4 ஆம் திகதி தரம் 1 - 5 மனன முற்றோதல், பண்ணிசை (அரையிறுதி), புராணபடனம், கதாபிரசங்கம் (இறுதி) - இணுவில் மத்திய கல்லூரி.

நவம்பர் 9 ஆம் திகதி தரம் 1-11 மனன முற்றோதல், பண்ணிசை (இறுதி) இணுவில் மத்திய கல்லூரி

நவம்பர் 10 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு தரம் 3 தொடக்கம் 11 வரை சைவசமய அறிவுப்போட்டி - மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

போட்டியாளர்கள் மேற்படி ஒழுங்கில் பங்குபற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# ‘குலாத்தி’ நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம் —

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் ஏற்பாட்டில் கவிஞர் சோ.பத்மநாதனின் ‘குலாத்தி’ என்ற மராத்திய நூல் நேற்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் மங்கள விளக்கை யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வாழ்த்துரையை சி.வி.கே.சிவஞானம் வழங்க நூலை அறிமுகம்செய்து கவிஞர் சோ.பத்மநாதன் உரையாற்றினார். இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள் என பலர் பங்குபற்றினர்.





பாராட்டி வாழ்த்துகின்றோம்

விஜயகுமார் அனுஷா



நெடுந்தீவு சிறிஸ்கந்தா வித்தியாலய மாணவியான வி.அனுஷா 2005ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 138 அதிக புள்ளிகளைப் பெற்று நெடுந்தீவு கோட்டத்தில் 1ஆம் இடத்தையும் தீவக வலயத்தில் 2ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை நயினை நாகபூஷணி அம்மன் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவதோடு, இவருக்குக் கல்வி கற்பித்த இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்றுமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை: இளையராஜா
கதைவசனம்: பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி நடித்த
மழை



நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய் சிம்ரன் மணிவண்ணன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

# சிறு விளம்பரம்

## அக்குபஞ்சர் வைத்தியம்

மூட்டுவாதம், வாதம், சலரோகம், உயர்ரத்த அழுத்தம், ஒற்றை தலைவலி, கைகால் உளைவுகள், உடல் பருமன் கூட்டுதல் குறைத்தல் போன்ற எந்த வகை நோயிற்கும் மருந்து மாத்திரைகள், பத்தியங்கள் இன்றி நிரந்தரத் தீர்வு பெற நாடவேண்டிய இடம் - ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை, சிவராஜா அலென்யூ, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (கனி கிறீம் ஹவுஸ் முன்பாக.) (2098)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இருபாலைச் சந்திக்கு அண்மையில் பழைய வீதியில் கிணறு (நன்னீர்) உட்பட 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

வாங்க விரும்புவோர் பின்வரும்



நெடுந்தீவு கோட்டத்தில் 1ஆம் இடத்தையும் தீவக வலயத்தில் 2ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை நயினை நாகபூஷணி அம்மன் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவதோடு, இவருக்குக் கல்வி கற்பித்த இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

தற்போது கல்வி கற்கும் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இவரைப் பாராட்டி பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடுந்தீவு. விஜயகுமார் தம்பதிகள். (தயா)

## மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற வீடு வாடகைக்கு

நல்ல சூழலில் அமைதியான இடத்தில் அழகான வீடு, திருமண வைபவங்கள் மற்றும் மங்களகரமான வைபவங்கள் அனைத்திற்கும் குடும்பமாக தங்கிருயிருந்து கொண்டாடுவதற்கு ஏற்ற வசதியான வீடு வாடகைக்கு உண்டு.

*தொடர்பு:-* த.குமாரசாமி அன் சன்ஸ்
248/ 1, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.07731 86842 (சி-4763)

## சுன்னாகம் நாகம்ஸ்

மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா,
வடிவேல்,
கலாபவன்மணி
நடித்த
**மழை**



அடுத்த வெளியீடு
அர்ஜுன், நமீதா நடித்த **ஆணை**

காட்சிகள்:-11.00,3.00,7.00 (பழைய நேரம்)

## மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்தீபன் நடித்த
**குண்டக்க மண்டக்க...**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

*30 முதல்*
முதன்முறையாக



விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு

யாழ்.மாவட்டத்தில்
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
**சிவகாசி**

இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
**விக்ரம், அசின்**
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
**மஜா**
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இருபாலைச் சந்திக்கு அண்மையில் பழைய வீதியில் கிணறு (நன்னீர்) உட்பட 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
நாதன் லட்சுமி பவான் ஹோட்டல்,
இருபாலைச் சந்தி. (2101)

**வாசிப்பு மாதம்**

"வாசியுங்கள் **அகவிழி** திறக்கும்"

**வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்**

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
**அகவிழி**
ஆசிரியத்துவ நோக்கு...

**தொடர்புகளுக்கு:**
No.03 Torrington Avenue,
Colombo - 7.

காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக கூடியதாக அனுப்பவும்.
T.P 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org (C/4683)

**துணிவகைப் பிறின்டிங்** - பெனர், ரை, ரீ-சேட் எம்போசிங் பிறிண்டிங் போன்றவற்றையும், **ஸ்கிறீன் பிறிண்டிங்** - நிறுவனங்களின் விளம்பரப் பெயர்ப் பலகைகள் (பிரபல ஓவியர் கோபால் பட்டாபி அவர்களின் பங்களிப்புடன்), பெரிய அளவிலான சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள், கலண்டர்கள், அழைப்பிதழ்கள், விசிற்றிங் காட் போன்றவற்றையும், **ஒவ்செற் பிறிண்டிங்** - புத்தகங்கள் (பிரபல ஓவியர் இராசையா அவர்களின் ஓவியப் பங்களிப்புடன்), சிட்டைப் புத்தகங்கள், நினைவு மலர்கள் போன்றவற்றையும் மற்றும் **லெற்றப்பிறஸ்** - வேலைகளையும் ஒரே இடத்தில் அழகுற அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள

# NOBLE Printers

# நோபிள் பிறின்ரேஸ்

103, Palaly Road, Jaffna. Reg: NAL/DS/625 Mobile: 077-3126748

# தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் அலரிமாளிகை!

## லஞ்ச ஆணைக்குழுவில் ஐ.தே.க முறைப்பாடு

கொழும்பு—

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் நடவடிக்கைகளுக்கு அலரி மாளிகையைப் பயன்படுத்துவதாகவும், அலரிமாளிகைக்கு வருபவர்களுக்கு பொது மக்களின் பணத்தில் விருந்துபசார்ரங்களைச் செய்வதாகவும், தனது அரசியல் பயணங்களுக்கு அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு ஹெலிகொப்டர்களில் செல்வதாகவும் குற்றம் சாட்டி ஐ.தே.க.பிரதிபொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க லஞ்ச ஊழல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள், பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் பாரிய குற்றமெனக் கருதப்படுவதால், பிரதமருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு திஸ்ஸ அத்தநாயக்க தனது முறைப்பாட்டினூடாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமர் தனது அரசியல் வைபவங்களில் கலந்து கொள்பவர்களுக்கு உணவுப்பொருட்களை வழங்குவதற்காகக் கொழும்பிலிருக்கும் கொழும்போ பிளாஸா ஹோட்டலுக்கு அரசாங்க பணத்திலிருந்து 5 லட்ச ரூபாவை வழங்கியுள்ளார். அதற்கான பற்றுச் சீட்டுக்கள் தன்னிடமிருப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி கண்டியிலிருந்து முல்கிரிகல நோக்கிச் செல்வதற்கு விமானப்படைக்குச் சொந்தமான ஹெலியை பிரதமர் பெற்றிருப்பதுடன், அதற்கென அரசாங்கப்பணத்தையே செலவிட்டுள்ளார்.

நாட்டின் பிரதமர் என்ற வகையில் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளுக்கு என ஹெலிகளைப் பயன்படுத்துவதில் தமக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்றாலும், அரசியல் நடவடிக்கைகளுக்கென அவற்றைப் பயன்படுத்துவது குற்றம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிவாரணம் வழங்கலில்

# யுத்தம், இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோர் புறக்கணிப்பு!

கொழும்பு—

மோதல்கள் மற்றும் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களைவிட, கடந்த வருடம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிக உதவிகளைப் பெறுவதாகவும் உதவி தேவைப்படும் அனைவருக்கும் அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு தசாப்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறைவான உதவிகளைப் பெறுகையில், அதே பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் அதிக உதவிகளை வழங்குவதாக இடம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச மனிதாபிமான விவகாரங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணைப்புப் பிரிவு இயக்குநரான டெனிஸ் மெக்னாமெரா தெரிவித்தார்.

சுனாமியால் இடம்பெயர்ந்தவர்கள் சிறந்த தங்குமிட வசதிகள், அதிக உணவு முத்திரைகள், பணம் மற்றும் அதிக உதவிகளைப் பெறுகின்றனர். சுனாமி பெரும் அழிவை ஏற்படுத்தியது. அந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதை நாம் யாரும் விரும்பவில்லை. எனினும் ஏனையவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

உலகளாவிய ரீதியில் 25 மில்லியன் மக்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ளனர். அதே எண்ணிக்கையானவர்கள் இயற்கை அழிவுகளால் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெலிக்கடை சிறையிலிருந்து 2 கைதிகள் தப்பியோட்டம்!

கொழும்பு—

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த விளக்கமறியல் கைதியொருவரும் மற்றொரு கைதியும் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் மதில் மேல் ஏறி தப்பிச் சென்றதாகச் சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

பலகுற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஒரு கைதியும் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் ஒரு கைதியுமே இவ்விதம் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இருவரும் சிறைச்சாலை வைத்தியசாலையின் கூரை மீதேறி அங்கிருந்து மதிலுக்குத் தாவி தப்பிச் சென்றுள்ளதாக வெலிக்கடைச் சிறைச்சாலை சிரேஷ்ட அத்தியட்சகர் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் மதில் 30 அடி உயரமானதாக உள்ளபோதிலும் வைத்தியசாலை உள்ள இடத்தில் மாத்திரம் மதில் அவ்வளவு உயரமாகக் கட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மஹிந்தவின் தேர்தல் கூட்டங்களைப் புறக்கணிக்குமாறு

# தனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்களுக்கு அமைச்சர் அனுரா உத்தரவு!



கொழும்பு—

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பங்கேற்க கூடாதென அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்போதைய அரசின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களின் ஆதரவை பிரதமர் மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட கூட்டம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பிரதமர் அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க கூடாதென வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழுள்ள தலைமை அதிகாரிகளுக்கு அமைச்சர் அனுரா தெரிவித்தார். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் கூட்டத்தில் பங்குபற்றாமல் விடுவதுடன் நின்றுவிடாது, பிரதமர் மஹிந்தவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக, அதிகாரிகள் தமது மாதாந்தச் சம்பளத்தில் எவ்வித தொகையையும் வழங்க கூடாதெனவும் அமைச்சர் அனுரா உத்தரவிட்டுள்ளார்.

(தே)

# ஜனாதிபதி தேர்தல் கடமைகளுக்காக குடாநாட்டுக்கு 300 பெண்பொலிஸார்!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக 300 பெண்பொலிஸார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இவ்வளவு தொகையினர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவது இதுவே முதற்தடவையெனவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் பெண் பொலிஸாருக்கு பற்றாக்குறை நிலவுவதால் தேர்தல் கடமையில் கூடுதலான பெண் பொலிஸாரை ஈடுபடுத்தும் நோக்கிலேயே இவர்களை அனுப்பியுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், நாடு முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக கொழும்பு பொலிஸ் தலைமையகத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த இரண்டாயிரம் பெண்பொலிஸார் தேவையான பிரதேசங்களுக்கு அனுப்பப்படவுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

(தே)

# வெலிக்கடைச் சிறையில் கைப்பற்றப்பட்ட முத்தலிப் வழக்கு ஆவணம் குறித்து ஆய்வு

கொழும்பு—

புலனாய்வுத்துறை அதிகாரி மேஜர் முத்தலிப் கொல்லப்பட்ட வழக்குத் தொடர்பாக வெலிக்கடைச்சிறையில் கைதி ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாகக்கொழும்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நீதிமன்ற நீதிபதி ஜிகன்பில பிட்டியவிடம்கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் இதைத் தெரிவித்தனர்.

இந்த வழக்கின் சந்தேக நபரான சஞ்சீவவிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

குற்றப்புலனாய்வுத் துறையினர் தாக்கல் செய்த மற்றொரு விசாரணை அறிக்கையில், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் விடுவிக்கப்படாத பிரதேசமான கிளிநொச்சிக்குக் கொலையாளிகளால் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டிருந்தது.

சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் குறித்த ஆய்வறிக்கையை பெற்றுள்ளதாகவும், கொலையாளிகளுக்குப் பாதுகாப்பு அளித்தற்காக சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதாகவும் குற்றத் தடுப்புப் பிரிவினரின் அறிக்கை கூறுகிறது.

அதுலலல்க கருணாரட்ண என்ற அனுரா (புதிய விமான நிலைய வீதி), ஆறுமுகம் சந்தீர் குமார என்ற ராஜன் (கோப்பாய்) மற்றும் ராஜரட்ணம் சரசுவதி என்ற உமா (ரட்ணமால) ஆகியோரும் இந்தக் கொலை வழக்கில் வேவு பார்த்தது மற்றும் சதிச் செயல்களுக்கு உடந்தையாக இருந்தது ஆகியவற்றுக்காக கைது செய்யப்பட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதியன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தக் குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் பதவி விலகவுள்ளார்?

கொழும்பு—

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான ஹட்சன் சமரசிங்க விரைவில் பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்பு பதவி விலகவுள்ளேன், வெளிநாட்டுப் பணி ஒன்றில் இணையவுள்ளேன். இது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கும் எந்த முடிவையும் ஏற்கத் தயாராக உள்ளேன்.

பிறதனியார் ஊடகங்களுடன் ஒப்பிடுகையில் கடுமையான நட்டத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இயங்கி வருவதால், அதை நிர்வகிப்பது மிகக் கடினமாக உள்ளது.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி இயக்குநரான ராஜ கதுகம்பொலவை தாக்கியதாக ஹட்சன் சமரசிங்க மீது குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து ஹட்சன் சமரசிங்கவின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் இந்த ராஜினாமா அறிவிப்பு வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தொடர்பாக

# ஐரோப்பிய ஒன்றியத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை

## ஜோன் குஷ்ணகன் அதிருப்தி

இலங்கையில் தேர்தல்களை நீதியாகவும், நியாயமாகவும் நடத்த ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாததையிட்டு இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐரோப்பிய கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் ஜோன் குஷ்ணகன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கவென, இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவில் சுமார் 66 பிரதிநிதிகள் இடம் பெறுகின்றனர்.

இந்தத் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்த அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும் என்றும் குஷ்ணகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த குஷ்ணகன் முன்னைய தேர்தல்களின்போது தம்மால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்று கவலை வெளியிட்டுள்ளதுடன், இனி மேலும் இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தேர்தல் கண்காணிப்புக்காக இலங்கை அரசினால் விடுக்கப்படும் அழைப்பை ஐரோப்பிய ஒன்றியம் உதாசீனம் செய்யநேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

# இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் தென்னாபிரிக்க அணியே வென்றது!




கேப்ரவுன் —

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் தென்னாபிரிக்க அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் கேப்ரவுனில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க வீரர்களாக சிமித்தும், புடிக்கும் களமிறங்கினர். ஸ்கோர் 3 ஆக இருந்தபோது பொண்டின் பந்துவீச்சில் ஓட்டமெதையும் பெறாமல் போல்டாகி வெளியேறினார் புடிக். அடுத்து சிமித்துடன் கிப்ஸ் ஜோடி சேர்ந்தார்.

ஆயினும் நியூஸிலாந்து வீரர் மில்ஸின் பந்துவீச்சில் இவர்கள் ஓட்டங்களை எடுக்கப் பெரிதும் திணறினர். ஸ்கோர் 69ஐ எட்டிய போது - ஸ்ரைரிஸின் பந்துவீச்சில் போல்டாகி ஆட்டமிழந்தார் சிமித்.

இவர் 44 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 36 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து களமிறங்கிய பொலக், ஓட்டமெதையும் எடுக்காத நிலையில் ஸ்ரைரிஸின் பந்துவீச்சில் அடம்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஸ்கோர் 71ஆக இருந்தபோது இவர் ஆட்டமிழக்க, அடுத்து ஸ்கோர் 74ஆக இருந்தபோது கிப்ஸ் ஆட்டமிழுந்தார்.

அடுத்து களமிறங்கிய கலிஸ் - பிறின்ஸ் ஜோடி ஸ்கோர் 120ஐ எட்டும்வரை தாக்குப் பிடித்தது. பிறின்ஸ் 19 ஓட்டங்களுடன் விற்றோரியின் பந்துவீச்சில் போல்டாக, அடுத்து களமிறங்கினரர் பௌச்சர்.

இவரும் பொறுப்புடன் ஆடியதால், ஸ்கோர் 180ஐ எட்டும்வரை விக்கெட் விழவில்லை. 6ஆவது விக்கெட்டாக பௌச்சர் வீழ்த்தப்பட்டார். 47 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவர், மில்ஸின் பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஸ்கோர் 188ஆக இருந்தபோது கலிஸும் 51 ஓட்டங்களுடன் மில்ஸின் பந்துவீச்சில் வின்சென்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழுந்தார்.

தொடர்ந்து லாங்வெல்ட் 1 ஓட்டத்துடனும், என்ரினி ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழுந்தனர். 50 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கெம்ப் 8 ஓட்டங்களுடனும், நெல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் மில்ஸ் 4, பொண்ட் 2, ஸ்ரைரிஸ் 2, விற்றோரி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து 202 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் நியூஸிலாந்து களமிறங்கியது.

தென்னாபிரிக்க வீரர்களின் அனல் பறக்கும் பந்துவீச்சில் நியூஸிலாந்து விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன. ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் வின்சென்ட் மட்டும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.

வின்சென்ட் 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இவர் 109 பந்துகளில் 9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பிளெமிங் 6, அஸ்ரில் 3, ஸ்ரைரிஸ் 27, மக்மிலன் 3, ஓரம் 11, மக்கலம் 1, விற்றோரி 0, பிராங்ளின் 21, அடம்ஸ் 6, மில்ஸ் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களை எடுத்தனர்.

முடிவில் நியூஸிலாந்து அணி 47.5 ஓவர்களில் 182 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் தென்னாபிரிக்க அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

என்ரினி, லாங்வெல்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். நிக்கிபோயே 2 விக்கெட்டுக்களையும் அன்ட்ரூ நெல், கெம்ப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரு அணிகளிடையேயான 3ஆவது ஒருநாள் போட்டி இன்று போர்ட் எலிசபெத்தில் நடைபெறவுள்ளது.




## பாகிஸ்தான் அணி அறிவிப்பு

இஸ்லாமாபாத் —

இங்கிலாந்து கிரிக்கெட் அணி - பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து - விளையாடவுள்ளது. இரு அணிகளிடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதன் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி முல்டானில் தொடங்கவுள்ளது.

இந்தநிலையில் டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சில போட்டிகளில் ஆடாமல் இருந்த அக்தர், சுழற்பந்து வீச்சாளர் முஸ்ராக் அகமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அணி விபரம் வருமாறு -

இன்சமாம் (கப்டன்), யுனுஸ்கான், மொகமட் யூசுப் (யுகானா), அப்ரிடி, சல்மான் பட், சொகைப் மலிக், அசிம் கமால், கம்ரன் அக்மல், ராணா நவீட், முஸ்ராக் அகமட், டனேஸ் கனேரியா, அர்சத் கான், சபீர் அகமட், சமி, அக்தர்.

## விளையாட்டு

# வட-கிழக்கு மாகாண மட்டத்திலான மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி!





திருகோணமலை —

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே 9, 11, 13, 15 17, 19 வயதுப் பிரிவினருக்கிடையே திறந்த போட்டி அடிப்படையிலான மேசைப் பந்தாட்ட சுற்றுப்போட்டி திருகோணமலை சிங்கள மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமானது.

இதில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 298 மாணவ, மாணவிகள் கலந்து கொள்கின்றனர். இவற்றுக்கு மேலாக திறந்த போட்டி அடிப்படையில் 30 பேரும், 55, 60 வயதுக்கிடைப்பட்டோருக்கான போட்டியில் 4 பேரும் கலந்து கொள்கின்றனர்.




# டெண்டுல்கரின் மீள் வருகை கிரிக்கெட் ஆட்டத்துக்கு நல்லது!

## இங்கிலாந்து வீரர் பிளின்ரொப்

லண்டன் —

டெண்டுல்கர் காயத்திலிருந்து மீண்டு களம் திரும்பியிருப்பது கிரிக்கெட் ஆட்டத்துக்கு நல்லது என்று இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான பிளின்ரொப் கருத்துத் தெரிவித்துள்ளார்.




அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கிய பிளின்ரொப்புக்கு ஆஷஸ் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

விருது பெற்ற பிளின்ரொப் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது -


இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் கொண்ட போட்டித் தொடரில் விளையாடவுள்ளது. அப்போது நான் டெண்டுல்கரைச் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

டெண்டுல்கர் உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆவார். அவர் மீண்டும் களம் திரும்பியிருப்பது கிரிக்கெட் ஆட்டத்துக்கு நல்லது.

ஆஷஸ் போட்டித் தொடரில் லோட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் ஆட்டத்தில் நாங்கள் தோற்றோம். அப்போது அடுத்துவரும் ஆட்டங்களில் தோல்விப் பயமின்றி அனுபவித்து ஆடுவது என்று முடிவு செய்து விளையாடினோம்.

2ஆவது டெஸ்டில் நாங்கள் வெற்றிச் சமநிலையை எட்டியதும் அவுஸ்ரேலியாவை வென்று ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றமுடியுமென்ற எண்ணத்துடன் ஆடினோம். இதுதான் ஆஷஸ் வெற்றியின் ரகசியம் என்று கூறினார்.

# அடுத்த 3 ஒருநாள் போட்டிகளுக்கான அணியிலும் கங்கூலிக்கு இடமில்லை!



மும்பை —

இலங்கை அணியுடனான அடுத்த மூன்று போட்டிகளுக்குமான இந்திய அணியிலும் கங்கூலி சேர்க்கப்படவில்லை.

இந்திய அணியின் வெற்றிக் கப்டனாகத் திகழ்ந்தவர் கங்கூலி. இன்று இவரது நிலைமை பரிதாபமாகிவிட்டது. பயிற்சியாளர் கிரேக் சப்பலுடன் கருத்து வேறுபாடு, டெனிஸ் எல்போ காயம் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படவே கப்டன் பதவி பறிக்கப்பட்டது. இலங்கை தொடரின் முதல் இரண்டு போட்டிக்கான அணியிலும் இடம்பெறவில்லை.

மீண்டும் அணிக்குத் திரும்பும் வேகத்தில் உள்ளூர் போட்டியான துலீப் தொடரில் சதமடித்து உடல்தகுதியை நிரூபித்தார் கங்கூலி. ஆனால், இவருக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளனர் தேர்வுக் குழுவினர். நேற்றுமுன்தினம் மொஹாலியில் அறிவிக்கப்பட்ட இலங்கை தொடரின் அடுத்த மூன்று போட்டிகளுக்கான அணியிலும் இவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார். முதல் இரண்டு போட்டியிலும் இலங்கையை வீழ்த்திய அதே வெற்றிக் கூட்டணியே தொடருமெனவும் தெரிவுக்குழு கூறியுள்ளது.

தெரிவுக் குழுத் தலைவரான கிரண் மோரே அளித்த பேட்டியில் -

கங்கூலி குறித்து கூட்டத்தில் நாங்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தினோம். சமீபகாலமாக அவரது ஆட்டம் நன்றாக இல்லை. இதற்காக கங்கூலியின் கிரிக்கெட் வாழ்க்கை இத்தோடு முடிந்துவிட்டது என நினைக்கவேண்டாம். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதற்காக அவரைத் தெரிவு செய்யவில்லை.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்குள் இளம் வீரர்கள் குறைந்தபட்சம் 20 அல்லது 30 போட்டிகளில் விளையாடிய அனுபவம் பெறவேண்டும் என்றார். தெரிவுக் குழுக் கூட்டத்தில் பயிற்சியாளர் கிரேக் சப்பல், கப்டன் ராகுல் ராவிட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு எதிரான கடைசி இரண்டு போட்டிக்கான அணி அகமதாபாத்தில் நடைபெறவுள்ள ஐந்தாவது போட்டியின் முடிவில் அறிவிக்கப்படும்.

# இந்தியாவுடனான போட்டிகளில் நல்ல பாடம் கற்றுக்கொண்டோம்

## கப்டன் அத்தபத்து கூறுகிறார்



மொஹாலி —

இந்தியாவுடனான இரண்டு போட்டிகளிலும் நல்ல பாடம் கற்றுக் கொண்டோம். அடுத்த போட்டியில் தவறுகளைத் திருத்தி வெற்றிக்குப் பாடுபடுவோமென இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தபத்து தெரிவித்தார்.

2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியைத் தழுவிய பின்னர் அவர் மேலும் கூறுகையில் -

எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆடாததால் தோல்வியடைந்தோம். இந்திய அணி வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள். குறிப்பாக டெண்டுல்கர், பதான் ஆகியோரின் ஆட்டம் வியக்கும் வகையில் இருந்தது.

நடந்து முடிந்த 2 போட்டிகள் மூலம் இந்திய அணியிடம் நல்ல பாடம் கற்றுக் கொண்டோம். அடுத்த போட்டியில் செய்த தவறுகளைத் திருத்தி, வெற்றிபெறப் பாடுபடுவோமென அவர் மேலும் கூறினார்.

# இலங்கை அணி தோற்றாலும் மெத்தனமாக இருக்கக்கூடாது

## இந்திய கப்டன் ராகுல் ராவிட்



மொஹாலி —

பந்துவீச்சாளர்கள் விரைவில் விக்கெட்டுக்களை வீழ்த்தியது இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தது என்று அணித்தலைவர் ராவிட் பாராட்டினார்.

மொஹாலியில் நடந்த 2ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பின்னர் இந்திய அணியின் கப்டன் ராவிட் அளித்த பேட்டியில் கூறியதாவது -

தொடக்க பந்து வீச்சாளர்கள் விரைவில் விக்கெட்டை வீழ்த்தியதோடு, இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு கடைசி வரை நெருக்கடி அளித்தனர். இது வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அணியின் ஒட்டு மொத்த ஆட்டமும் மிகவும் சிறப்பாக இருந்த்து. இலங்கை அணி தோற்றாலும், நல்ல நிலைக்குத் திரும்பும் சக்தி கொண்டது. எனவே, மெத்தனமாக இருக்கக்கூடாது என்று தெரிவித்தார்.

# திருநெல்வேலி பொதுச் சந்தையில் மழை நீர் தேக்கம்; மக்கள் விசனம்!

திருநெல்வேலி—

திருநெல்வேலி பொதுச் சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால்- அந்தப் பகுதி சேறும், சகதியுமாகக் காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தை உட்புறம், வெளிப்புறங்கள் சேறும் சகதியுமாக வுள்ளதால், சந்தைக்கு அன்றாடம் பொருட்களைக் கொள்வனவு செய்யவரும் வியாபாரிகள், பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், சந்தையை அண்டிய வீதிகளில் மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாலும், வீதியின் ஓரங்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ, வான், லொறி போன்ற கனரக வாகனங்களை தரித்து நிற்க விடுவதாலும், சாதாரணமாக வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவ, மாணவியர், பொதுமக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் பயணிக்கும் நிலையில் உள்ளனர்.

நல்லூர் பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள இந்தச் சந்தைப் பகுதிகளை மேற்படி சபையினர் வருடா வருடம் லட்சக் கணக்கான பணத்தைச் செலவிட்டு புனரமைப்புச் செய்தாலும், முறையாக வெள்ளம் வழிந்தோடக் கூடிய வடிகால்கள் இல்லாமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அதிகரித்துவரும் வியாபாரிகள், விற்பனை நிலையங்களைக் கட்டுப்படுத்தாமல் விடுவதால், வீதியின் ஓரங்களிலும் வியாபார நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக ஆடியபாதம் வீதியில் பல வியாபாரிகள் வீதியின் இரு மருங்கிலும் தமது வியாபாரப் பொருட்களைப் பரப்பி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை காணக் கூடியவாறுள்ளது.

இதனைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (63)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் சங்கம் அமைப்பு!

பருத்தித்துறை—

வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, நிவாரணங்கள் வழங்கப்படாது பாதிப்புற்ற வர்த்தகர்கள் ஒன்றிணைந்து சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் வடமராட்சியின் கரையோரப் பகுதிகளுக்கு சமீபமாக வர்த்தகத்தை மேற்கொண்டுவந்த வர்த்தகர்கள் தமது தொழில் ஸ்தலங்களையும், பொருட்களையும் இழந்து பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

ஆனால், ஏனையோருக்கு வழங்கப்பட்டது போல இவர்களுக்கு நஷ்டஈடு எதுவுமே வழங்கப்படாது, இவர்கள் மீண்டும் தொழிலை ஆரம்பிக்க முடியாமல் வறுமை நிலைக்குள்ளாகினர்.

பலபோராட்டங்கள், பேரணிகளை நடத்தியும் - பலரிடம் மகஜர்களைக் கையளித்தும் சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஒரு வருட காலமாகின்றபொழுதும் எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை.

இதனையடுத்தே பாதிப்புற்ற வர்த்தகர்கள் ஒன்றிணைந்து சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சங்கத்தின் மூலம் தமது கோரிக்கைகளை முன்வைக்கப் போவதாகவும், அதற்கும் எந்த முடிவுகளும் கிடைக்கவில்லையெனில் வெகுஜனப் போராட்டங்களை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் க.சூரியகுமாரன் தெரிவித்தார். (14)

# 90 இலட்சம் ரூபா செலவில் படகு உற்பத்தி நிலையம்!

பருத்தித்துறை—

நோர்வே அரசின் அனுசரணையுடன் 90லட்சம் ரூபா செலவில் படகு மற்றும் வலை உற்பத்தி நிலையம் ஒன்றை வடமராட்சியில் நிறுவ ஏற்பாடாகியுள்ளது.

இந்தப் படகு உற்பத்தி நிலையத்தை பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் அமைப்பதற்கான நடவடிக்கையில் - முதற்கட்டமாக பதின்நான்கு பரப்புக் காணியை, பதினைந்து லட்சம் ரூபா செலவில் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் கொள்வனவு செய்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட வடமராட்சிப் பகுதியில், கடற்தொழில் உபகரணங்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவிவருகின்ற நிலையில், நோர்வே அரசு வடமராட்சிப் பகுதியில் படகுகள், வலைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை நிறுவ முன்வந்துள்ளனர்.

இந்த நிலையத்துக்காக மேலும் இருபது பரப்புக் காணியைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் -

இந்த உற்பத்தி நிறுவனத் திற்கு சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த படகுகளைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இணைக்கப் படவுள்ளதாகவும், வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளர் க.சூரியகுமா ரன் தெரிவித்தார். (14)

# சின்னஞ்சிறு செய்திகள்

## திறப்புவிழா

கரணவாய்—

குளங்கரை கரணவாய் மத்தி பகுதியில் போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட பொதுக்கட்டடத் தொகுதி ஒன்று - எதிர்வரும் 2ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் மத்தி சனசமூக நிலையத் தலைவர் தர்ஷன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினராக போரூட் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் நா. கோகுலதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (12)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்—

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பொது அமைப்பின் பொதுக்கூட்டம் - இன்று காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி தலைவர் என். கனகலிங்கம் கேட்டுள்ளார்.

## உறக்கத்தில் இருந்த வேளை திருட்டு

யாழ்ப்பாணம்—

நள்ளிரவுவேளை அடைமழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, யன்னல் கம்பிகளூடாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் ஒரு தொகைப் பணத்தைச் திருடிச் சென்ற சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு சீனியர் ஒழுங்கைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகரான வே.இரத்தினவேலு என்பவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து, அந்தப் பகுதியில் விழிப்புக்குழு ஒன்றை அமைக்கும் பணியில் அந்தப் பகுதி இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். (111)

# மாடுகளுக்கு சத்திர சிகிச்சை

பருத்தித்துறை

கழிவுகளை உண்ணும் மாடுகளுக்கு கழிவகற்றும் சத்திர சிகிச்சைகள் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி வடமராட்சிப் பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டில் 12 மாடுகளுக்கு இவ்வாறான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவரின் மாட்டுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின்போது இரும்புக் கம்பிகள், ஆணிகள், பொலித்தீன், கடதாசி, சீலைத்துணி போன்ற 12 கிலோ எடையுள்ள கழிவுப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் தெரிவித்தார்.

மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் இவ்வாறான கழிவுப் பொருட்களை உண்பதால், பாரிய விளைவுகள் எதிர்நோக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (14)

## அடிக்கல் நாட்டப்பட்டது

நெல்லியடி—

பருத்தித்துறை-மந்திகை அரசினர் வைத்தியசாலையின் கிழக்குப்புறமாக வைத்தியசாலைப் பகுதிக்குள் கிறிஸ்தவ கத்தோலிக்க தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆலயத்தின் அடிக்கல்லை பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ப.இருதயதாஸ், மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர்கதிரவேற்பிள்ளை ஆகியோர் நாட்டி, கட்டட வேலையை ஆரம்பித்து வைத்தனர். (13)

## விவசாயம் செய்ய படையினர் அனுமதி மறுப்பு

அரியாலை—

அரியாலை உயர் பாதுகாப்பு பகுதியில் வசிக்கும் விவசாயிகள் விவசாயம் செய்யபடையினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இவர்களுக்குப் பாதுகாப்புப் படையினரால் விவசாய அடையாள அட்டை வழங்கப்பட்டும் விவசாயம் செய்ய அனுமதிக்கவில்லை.

இதனால் தங்களது குடும்பத்தின் எதிர்கால நிலை என்னவாகும் என ஏங்கி நிற்கின்றனர். இதற்கு பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (72)

# மாதகல் கடற்தொழிலாளர் சம்மேளனத்துக்கு நீர்த்தொட்டி அமைத்துத்தருமாறு கோரிக்கை

சுதுமலை—

மாதகல் கடற்தொழிலாளர் சம்மேளனத்துக்கு நீர்த்தொட்டி அமைத்துத் தரும்படி - உள்ளூராட்சி உதவியாளரால், சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல் பகுதியில் குடிநீரின் தரம் பரிசோதனை செய்யப்பட்டு வருவதாகவும், மிக விரைவில் இந்தப் பகுதிகளுக்கு நீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும், இத்துடன் மாதகல் கடற்தொழிலாளர் சம்மேளனத்துக்கு ஓர் நீர்த்தொட்டியை அமைத்துத் தரும்படியும் மானிப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளரால், சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கவனத்தில் எடுத்த பிரதேச செயலர் - இந்த விடயம் தொடர்பான முன்னேற்ற அறிக்கை தனக்கு கிடைக்கவில்லை எனவும், முன்னேற்ற அறிக்கையையும், பயனாளிகள் தொகையையும் அனுப்பி வைக்கும்படியும் கோரியுள்ளார். (44)

## கேதாரகௌரி பூஜை

கொக்குவில்—

எதிர்வரும் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (தீபாவளி தினத்தன்று) அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் கேதார கௌரி விரத பூசை பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதேவேளை - அன்றைய தினம் தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டங்களை முன்னிட்டு - விசேட அபிஷேக ஆராதனைகள், வழிபாடுகள், பூசைகள் நடைபெறுமென்றும் ஆலய பரிபாலனசபையினர் தெரிவிக்கின்றனர். (206)



கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சில்லாலை பங்கின் நற்கருணைப் பேரணி நிகழ்வில் பங்குத்தந்தை யூட் நிக்சன் நற்கருணை வழிபாடு நிகழ்த்துவதையும், நற்கருணைப் பேரணியில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : த.விசாலன்
முகவரி : கிளிநொச்சி.

அகவை ஒன்று



பெயர் : ச.அரிஸ்
முகவரி : கிளிநொச்சி.

அகவை நான்கு



பெயர் : ம.துவாரகன்
முகவரி : சுழிபுரம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்




# இந்தக் கதை முடிவதில்லை

இது சோஹெய்ப் அக்தரின் கதை. இந்த முப்பது வயதான பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் தொடர்ந்து இடம் பெற முடியாமற் போகின்றமைக்குக் காரணம் ஒன்று அவரது உடற்தகுதியின்மை, உபாதைகள் அடுத்தது அவர் நடத்தைக் கோலம். எது எவ்வாறாயினும் கடந்த பத்து மாதங்களாக இவர் பாகிஸ்தான் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அதாவது இந்தியச் சுற்றுப்பயணம், மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணம் இரண்டிலும் இவருக்கு இடமிருக்கவில்லை.


சோஹெய்ப் அக்தர் நான் கெட்ட பிள்ளை இல்லை

இக்கால இடைவெளியில் இங்கிலாந்தின் கவுன்ரி போட்டிகள் சிலவற்றிலும், அவ்ரோ - ஏசியன் சுற்றுத்தொடரிலும் (AFRO -ASIAN SERIES) மற்றும் அண்மையில் முடி வடைந்த SUPER SERIES ஒருநாள் போட்டிகள் ஆகியவற்றிலும் பங்கு கொண்டார். இந்த ஆட்டங்களில் அக்தர் மோசமாக விளையாடினார் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஏன் இவருக்கு அணியில் நிரந்தர இடம் பெறமுடியாமல் போகிறது.

இப்பொழுது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் பேசுகிறார். அக்தர் முப்பது மீற்றர் தூரம் வரை ஓடிவந்து பந்து வீசுகிறார். இவரைப் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் அணிக்கு ஒரு வளம் தான். ஆனால் இவர் எடுத்துக்கொள்ளும் தூரமும், வேகமும் அபரிதமானது. இதற்கு தற்போது இவர் வெளிப்படுத்தும் உடற்தகுதியைவிடவும் மேலதிகமாக உடற்தகுதியைக் காட்டவேண்டும். இங்கு தான் பிரச்சினை உள்ளது என்கிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான் இன்னொரு விதமாகப் பேசுகிறார். அக்தர் அணிக்குள் மீள வருவதாக இருந்தால், தன் உடற்தகுதி மற்றும் அணி சார்ந்த நடத்தைக் கோலங்களில் நிரம்ப IMPROVEMENT காட்ட வேண்டும் என்று கூறியிருக்கிறார். தான் அக்தருடன் நீண்ட நேரம் உரையாடியதாகவும், அக்தர் இவ்விரண்டு விடயங்களிலும் கூடிய கரிசனை எடுப்பதாகத் தனக்கு உறுதி அளித்துள்ளதாகவும் கூறியிருக்கிறார்.

அக்தருக்கு வூல்மர் ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறார். அதாவது நடைபெறப்போகும் உள்ளூர் பந்தயமொன்றில் அக்தர் முழு ஈடுபாட்டுடன் விளையாடித் தன்னை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் எதிர் வரும் இங்கிலாந்துக்கு எதிரான சுற்றுப்போட்டி இலகுவானதல்ல. அதற்கேற்றபடி துல்லியமான அணித் தெரிவென்பதே முதன்மை என்கிறார் வூல்மர்.

அக்தருக்கு இன்னொரு கோணத்திலும் சோதனை உருவாகி விட்டது. மொஹமட்சமி, உமர் குல் மீண்டும் உடற்தகுதியை நிரூபித்து விட்டார்கள். ஷபீர் அகமட் பந்துவீச்சு முறைமை பற்றிய சர்ச்சையில் இருந்து விடுபட்டுள்ளார். இதற்கு மேலாக மொகமட் ஆசீப், நஜாப்ஷா, மொகமட் கலீல் என்றொரு வரிசை. மேற்படி பெயர்கள் எல்லாம் பாகிஸ்தானின் இளம் வேகப்பந்து வீச்சாளர் வரிசை. எனவே இவர்களுடனும் அக்தருக்குப் போட்டி இருக்கிறது.


பொப் வூல்மர் பிரம்பும் கையுமாக

எது எவ்வாறாயினும் நீண்டதான வேகப்பந்து வீச்சாளர் வரிசை கொண்ட பாகிஸ்தான், இன்னமும் சோஹெய்ப் அக்தரின் கருணையை நாடி நிற்கிறது என்பதிலும் சந்தேகமில்லை. இந்த வகையில் அக்தர் தன்னை ஒரு அதிசிறந்த வேகப்பந்து வீச்சாளரென நிரூபிக்க முயலவேண்டும்.

அதாவது பயிற்றுனர் கூறுபவற்றைக் கேட்டு தன் வேகப் பந்து வீச்சை மேற்கொள்ள வேண்டும். அடுத்தது முக்கியமாக மைதானத்துள்ளே, வெளியே அக்தர் சர்ச்சைகளில் இருந்து விடுபட்டுக் கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் இவரே தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்ட நிலையில்தான் போய் முடியும். எந்த ஒரு கிரிக்கெட் ரசிகரும் நிச்சயம் அதனை விரும்பமாட்டார்கள். ஏனெனில் அக்தரின் சர்ச்சைக்கு அப்பால் திறமை என்பது பல மடங்கு பல தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

— ஜோசப் கிருஷ்ணா

# முடியமுன் முடங்கியவர்கள்

கிரிக்கெட் பொறுத்து எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் தாம் சார்ந்த அணியை வெற்றி பெறச் செய்துவிட்டு, ஆட்டமிழக்காமல் DRESSING ROOM திரும்புவதையே அதிகம் விரும்புவார். ஆனாலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு நிகழ்ந்து விடுவதில்லை. ஆட்டமிழப்பு முறைகள் பல வழிகளாக இருந்தாலும், சதமடிக்க முடியாமல் 90களில் ஆட்டமிழக்கும் துரதிஷ்டம் இருக்கிறதே... அப்பப்பா அது சொல்லில் வடிக்க முடியாத சோகம்.


அண்டி பிளவர் யாருக்கும் வேண்டாம்

அறிமுக வீரர்களாக இருந்தாலும் சரி, அனுபவ வீரர்களாக இருந்தாலும் சரி, அந்த நேர TENSON ஆலும், பரபரப்புச் சூழ்நிலையாலும் தாம் செய்யும் சிறிய தவறுகளால், சதங்களை இழந்து பவிலியன் திரும்புகின்றனர். பின்னர் தனிப்பட்ட சாதனைகளைவிட அணியின் வெற்றியே முக்கியமென வீரர்கள் கூறுவதும், அவற்றையெல்லாம் ரசிகர்கள் ஜீரணித்துக் கொள்வதும் சகஜமான விடயங்கள்.

இந்தவகையில் டெஸ்ட் போட்டிகளில் சதமடிக்க முடியாமல் 90களில் அதிக தடவைகள் ஆட்டமிழந்தவர்கள் எனும் துரதிஷ்ட பெருமைக்குரியவர்களாக விளங்குபவர்கள் கங்காரு நாட்டின் இரண்டு வீரர்கள். அவர்கள் வேறுயாருமல்ல. முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவோவும், முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், தற்போதைய தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளருமாகிய மைக்கல் ஸ்லேற்றரும். இவர்கள் இருவரும் 9 தடவைகள் துயர்நிறைந்த இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதில் மைக்கல் ஸ்லேற்றர் 9 தடவையுமே ஆட்டமிழந்து போய்விட்டார். ஆனால் ஸ்ரீவோ இவற்றில் இரண்டு தடவைகள். அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த சந்தர்ப்பங்களில் துரதிஷ்டத்தின் துரதிஷ்டமாக 94,99 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார்.

இவர்களையடுத்து மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரரான அல்வின் காளிச்சரண் இந்த மனம் வெதும்பும் சாதனையை 8 தடவைகள் புரிந்துள்ளார்.

அடுத்து ஒருநாள் போட்டிகள் என்ற வகுதிக்குள் வரும்போது, இந்தத் துயரத்தின் உச்சியில் கொடிகட்டிப் பறப்பவர்கள் இலங்கை அணியின் முன்னாள் வீரரான அரவிந்த டி சில்வாவும், சிம்பாப்வே அணியின் முன்னாள் அணித்தலைவரும், விக்கெட் காப்பாளருமான அண்டி பிளவரும் தங்களை அறியாமலே, விரும்பாமலே 9 தடவைகள் நிகழ்த்தியுள்ளனர்.



ஆனாலும் இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே நாக்பூரில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் 93 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததன் மூலம், மேற்கூறிய இருவரது சாதனைகளோடு அவரும் இணைந்துள்ளார். டெண்டுல்கர் இந்த 9 தடவைகளில் இலங்கை, பாகிஸ்தான் அணிகளுடன் தலா 3 தடவையும், அவுஸ்ரேலிய - இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுடன் தலா ஒவ்வொரு தடவையும் ஆட்டமிழந்துள்ளார்.

டெண்டுல்கர் கடைசியாக 2003 உலகக் கிண்ண தொடரில் ஜோஹனஸ்பேர்க்கில் நடைபெற்ற இலங்கை அணிக்கெதிரான SUPER SIX போட்டியில், அரவிந்த வீசிய பந்துக்கு SWEEP SHOT அடிக்க முற்பட்டபோது, சங்கக்காரவிடம் பிடிகொடுத்து 97 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

தற்போது நாக்பூர் ஒருநாள் போட்டியில், விட்டு விளையாட வேண்டிய பர்வேஸ் மஹ்ரூபின் OUT SIDE THE OFF STUMP BALL ஐ தேவையில்லாமல் தொட்டுப்பார்த்து சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் அனைத்து சாதனைகளையும் முறியடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுபவர் டெண்டுல்கர். போற போக்கைப் பார்த்தால் 90களில் ஆட்டமிழக்கும் சோதனையிலும் சாதனை படைத்து விடுவாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

- விமலன்

# பொன்னுக்கு தங்க மனசு

உலக மகளிர் ஒற்றையர் ரெனிஸ் தரவரிசையில் 4வது இடத்தில் உள்ளவர் பிரான்ஸின் அமெலி மொரிஸ்மோ. இவர் தனது விளையாட்டுத் துறைக்கு அப்பால் சிந்திக்கும் மூன்று விடயங்கள். திறமை வாய்ந்த சிறார்களை தம் இலக்கையடைய ஊக்குவித்தல் (GIFTED CHILDREN), புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தல், வறுமையில் வாடும் மக்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.


அமெலி மொரிஸ்மோ எனது இன்னொரு முகம்

முதலாவது இலக்குப்பற்றிப் பேசும்போது இதற்கென ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளார். இதன் பெயர் LITTLE DREAM FOUNDATION இது விளையாட்டுத் துறையாக இருக்கலாம் அல்லது இசைத் துறையாக இருக்கலாம். சரி வேறேதாகவும் கூட இருக்கலாம். நான்கு வயதுக்கு மேற்பட்ட பதினாறு வயதுக்குட்பட்ட அதீத திறமை வாய்ந்தவர்களைத் தத்தம் துறையில் மேலும் முன்னேற வசதி செய்து கொடுக்கும் இந்த அமைப்பின் ரெனிஸ் சார்ந்த துறையில் இவரே நேரடியாகப் பொறுப்பாக உள்ளார். இவர் சிறார்களின் விளையாட்டைப் பார்த்து நல்லாலோசனைகளை வழங்குகிறார்.

இன்னொருபுறம் கியூரி புற்றுநோய் நிறுவனத்தோடும் இணைந்து தன் கருமங்களை ஆற்றுகின்றார். எனது தந்தை புற்றுநோயால் மரணமானவர். இதுவே என்னை இந்த நிறுவனத்துடன் இணைத்துக் கொள்ளத் தூண்டியது என்று கூறுகிறார் அமெலி. இந்த வகையில் புற்றுநோய் பற்றிய ஆய்வு மற்றும் புற்று நோய்க்கான சிகிச்சை எனும் இரண்டு துறைகளின் அபிவிருத்திக்கும் தான் உதவப் போவதாக அறிவிக்கின்றார்.


நடியா பெட்ரோவா அதே முகம் எனக்கும் உண்டு

இதேவேளை WTA அமைப்பு ஏழைகளுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பானது தன்னாலான உதவி, நிதியுதவி மற்றும் கட்டடப் பொருட்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.


ரஷ்யாவின் நடியா பெட்ரோவா றோமானியா நாட்டில் இத்தகைய செயற்திட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கு விஜயம் செய்திருந்தார். இதேபோல அமெலியும் சிறந்த பங்கு வகிக்க முடியுமென்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

நான் இந்த விடயத்தில் மிக ஆர்வமாக உள்ளேன். இருந்தும் உடனடியாகச் செல்ல எனது விளையாட்டு அட்டவணைகள் தடையாகப் போய் விட்டது. ஆனால் நான் அவர்களுடன் தொடர்ந்து தொடர்புகளை மேற்கொண்டுள்ளேன் என்று கூறியுள்ளார்.

நாம் அறிந்தது சில. அறியாதன பல. ஆனால் அறிந்தவற்றுள் மானிட நேயம் நிரம்பிய செய்திகளையறியும் போது, அதுவும் விளையாட்டுத் துறை சார்ந்த பிரபலங்கள் அவற்றுள் தொடர்புபடும் போது, அந்தப் பக்கத்தையும் எடுத்துக்காட்டுவது எமது கடமையாகின்றது. ஏனெனில் இவர்களது வாழ்வில் நிலைத்து நின்று புகழ் கொடுக்கக் கூடியது இது ஒன்று தான்.

- நிர்மலன்

# கனவுகள் கற்பனைகள்




முஸ்ராக் அகமட் மாற்றமுடியுமா?

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணியை தமது சுழற்பந்து வீச்சினால் வீழ்த்துவோமென சூளுரைத்துள்ளவர் வேறு யாருமல்ல. பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாம் உல்ஹகத்தான்.

அண்மைக் காலமாக அதிகம் கதைத்து வருபவர்களில் இன்ஸமாமும் ஒருவர். நடந்து முடிந்த அவுஸ்ரேலிய - உலக லெவன் அணிகளுக்கிடையிலான போட்டியில் சச்சினுக்கு பதிலாக தன்னைச் சேர்த்ததை கடுமையாக விமர்சித்த அவர், இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளப்போவதில்லை என வீரவசனம் பேசினார். பின்னர் எந்தவித பேச்சும் இல்லாமல் போட்டியில் கலந்து கொண்ட அவர், நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் ஒரு ஓட்டத்தையும், அடுத்த இனிங்ஸில் டக் அவுட்டாகியும் பவிலியன் திரும்பினார்.

இவரது நடத்தைகள் குறித்து அவுஸ்ரேலிய பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்தபோது, அணியாக விளையாடினால் ஒற்றுமை, வெல்லவேண்டுமென்ற ஆக்ரோஷம் இருக்கும். ஆனால் உலக லெவனில் அப்படி இருக்கவில்லை என விளக்கமும் அளித்தார்.

இந்த நிலையில் தமது நாட்டிற்கு வரும் இங்கிலாந்து அணியை சுழற்பந்து வீச்சால் வீழ்த்துவோமென சூளுரைக்கின்றார். முதலில் இன்ஸமாம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு முகம் கொடுக்கமாட்டார்கள் என்ற காலம் மலையேறி விட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



இன்ஸமாம் வழுக்கும் கவனம்

அண்மையில் நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் உலகின் முன்னனி சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோன் 41 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்த போதிலும் இங்கிலாந்து அணி எவ்வாறு வெற்றி கொண்டது.

இதைவிட இந்திய, இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாகவே உருவாக்கப்பட்டதென்ற கருத்தொன்று உள்ளது.

35 வருடமாக இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்த முடியாதென்ற கனவை அவுஸ்ரேலிய அணி கடந்த வருடம் முறியடித்தது. இதன்போது அவர்கள் கும்ளே, ஹர்பஜன்சிங்கின் சுழலை எதிர் கொண்டே வெற்றி கண்டார்கள்.

ஏன் அண்மையில் நடந்த அவுஸ்ரேலிய - உலக லெவன் அணிகளுக்கான போட்டிகளிலும் உலக லெவன் சார்பாக முரளி, வெற்றோரி போன்ற தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இருந்தும், அவுஸ்ரேலிய அணி எவ்வாறு வெற்றி கண்டது.

எனவே ஒரு போட்டியில் சுழற்பந்து வீச்சு முக்கியத்துவம் பெறலாம் இல்லையெனக் கூறவில்லை. அதற்காக சுழற்பந்து வீச்சால் அணியையே வீழ்த்துவோமென இன்ஸமாம் கூறியிருப்பது நகைப்புக்குரிய விடயமாகவே உள்ளது.

— யசோ

# பறவை தரை இறங்கப் போவதில்லை



கரங்களை நீட்டுகிறோம்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற ஸ்ரீவ்வோ சர்வதேச கிரிக்கெட் முன்னேற்றம் சம்பந்தமாகப் பேசுகிறார். இவர் தகுதி நிலையில் தாழ்ந்து போயுள்ள கிரிக்கெட் நாடுகளுக்கு உதவுவதன் மூலம் அவர்களை முன்னேற்றம் காணச்செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார். அவர் சுட்டிக்காட்டும் நாடுகள் சிம்பாப்வே, பங்களாதேஷ், கென்யா. முதல் இரண்டும் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகள். கென்யா டெஸ்ட் அந்தஸ்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் நாடு.

தனது சுயசரிதைப் புத்தகத்தை வெளியிட்ட நிகழ்வொன்றில் இந்த எண்ணத்தை அவர் வெளியிட்டுள்ளார். எனது இரத்தத்திலேயே கிரிக்கெட் ஊறிவிட்டது. நான் விரைவில் கிரிக்கெட் துறையில் தீவிரமாக ஈடுபடுவேன் என்பவர் - அவுஸ்ரேலிய அணியுடனான எனது உறவு மிக நெருக்கமானது. எல்லோரும் எனது நண்பர்கள். ஆகவே அவுஸ்ரேலியப் பயிற்சியாளர் என்ற நோக்கு தற்போதைக்கு எனக்கு இல்லை என்கின்றார். ஆனால் எனது சிந்தனையெல்லாம் கென்யா, பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளை எவ்வாறு தரம் உயர்த்த உதவமுடியும் என்பதுதான். இந்த நாடுகளின் தரத்தை உயர்த்தாவிட்டால் ஒட்டுமொத்த கிரிக்கெட்டுக்கும் அது பாதகமாக அமையும். இந்த நாடுகள் இன்றைய நிலையில் டெஸ்ட் தரத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இவர்களை டெஸ்ட் தரத்துக்கு உயர்த்த வேண்டும். பங்களாதேஷ் தன் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். கென்யா மற்றும் சில கிழக்கு ஆபிரிக்க நாடுகள் நிறைந்த திறமை வாய்ந்தவை. அவர்களுக்கும் வேகமான வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டும். இதேவேளை உயர்தகுதி நிலையில் உள்ள நாடுகள் தம்மகத்தே நல்ல வளங்களையும், நுட்பங்களையும் கொண்டுள்ளன. அவர்களுக்குச் சமனாக மற்ற நாடுகளையும் கொண்டுவராவிட்டால், கிரிக்கெட் ஆட்டம் என்பது ஓர் அலுப்புத்தட்டும் விடயமாகப் போய்விடும் என்று கூறுகிறார்.




ஸ்ரீவ் வோ அரவணைக்கும் கரங்கள்

ஸ்ரீவ்வோ வெறும் கிரிக்கெட் வீரர் மட்டுமல்ல, அவரது சிந்தனைச் சிறகுகள் பல்வேறு திசையில் சிறகடித்துப் பறக்கின்றன. தான் வரித்துக்கொண்ட துறையில் முத்திரை பதித்த ஸ்ரீவ்வோ, அந்தத் துறையில் ஏனையோரும் முத்திரை பதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். நல்ல மனிதரின் நல்ல சிந்தனைகள்.

— ஜெராட்

# கிழக்கை அரவணைக்கும் மேற்கு



மைக்கல் ஜோன்சன் பாயும் புலி

அமெரிக்காவின் மைக்கல் ஜோன்சன் ஐந்து முறை ஒலிம்பிக் சம்பியன் பட்டம் பெற்றவர். இவர் தனது காலத்தில் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் சாதனைகளை ஏற்படுத்தியவர்.

இதேவேளை 2008ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற இருப்பது சீன நாட்டில். இந்நிலையில் சீனா எந்தெந்த முயற்சிகளையாவது செய்து, தங்கப் பதக்கப் பட்டியலில் முதலிடம் பெற ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில்தான் முன்சொன்ன அமெரிக்க தடகள வீரர் மைக்கல் ஜோன்சன் தொடர்புபடுகின்றார். முன்னரும் சீன தடகளப் போட்டிகள் தொடர்பில் இவர் சீனாவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார். ஆனால் தற்போது ஐக்கிய அமெரிக்காவிற்கே தடகள வீரர்களை அழைத்துச் சென்று பயிற்சிகளை வழங்கப் போகின்றார்.

சீனா தன்னைத்தானே நம்பும் நாடு. இதனால் வெளிநாட்டு நிபுணத்துவம் பொறுத்து பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. ஆனால் தற்போது உலகமயமாதலில் இருந்து விளையாட்டுத் துறை சார்ந்த பரிமாணத்திலும் சீனா விலக முடியாதுள்ளது போலத்தெரிகின்றது.

பெருமளவு தடகள வீரர்களை அமெரிக்காவுக்கு அழைத்துப் பயிற்சி கொடுக்கப் போகிறோம் என்கிறார் மைக்கல் ஜோன்சன். இவரே சீனாவின் முதன்முதல் வெளிநாட்டு பயிற்றுனர் என்ற பெயரையும் பெற்றுக் கொள்கின்றார். உலகின் அதிசிறந்த தடகள வீரர்களுக்கும் சீனாவின் முதன்மைத் தடகள வீரர்களுக்கும் இடையில் பெருத்த இடைவெளி ஒன்று இருப்பதை சீன தடகளச் சம்மேளனம் (CCA) ஏற்றுக்கொள்ளத் தவறவில்லை.



ஷு ஜியாமிங் நான் சிறுத்தை

ஆனால் அமெரிக்க BAYLON UNIVERSITY யின் தடகள பயிற்றுனர் CLYDE HART கருத்துக் கூறும் போது- சீன வீரர்களுக்கும், ஐக்கிய அமெரிக்க வீரர்களுக்கும் இடையில் பெரும் வேறுபாடொன்றையும் நான் காணவில்லையென்று கூறியுள்ளார்.

சீன வீரர்கள் மிகக் கடுமையாக உழைக்கும் இயல்பு கொண்டவர்கள் என்பது விளங்குகிறது. இருந்தும் ஒரு சில நாட்களில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. என்னைப் பொறுத்தமட்டில் 2008 ஒலிம்பிக் போட்டிகளுடன் முடிவடையும் பயிற்சியாக நான் இதைப் பார்க்கவில்லை. 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் தான் சீன தடகளப் போட்டிகளின் ஆரம்பமாகப் போகின்றன என்கிறார் அவர்.

மேற்சொன்ன BAYLON UNIVERSITY யில் தான் சீன வீரர்கள் தம் பயிற்சிகளை மேற்கொள்ள இருக்கிறார்கள். சீனர்கள் இலட்சியப் பிடிப்பு மிக்கவர்கள், விட்டுக்கொடாதவர்கள். சீனரின் ஆர்வமும், ஐக்கிய அமெரிக்காவின் நவீன நுட்பங்களும் ஒன்று சேர்ந்தால், சீன தடகளப் போட்டிகளில் பெரும் பாய்ச்சல் ஒன்றைக் காணலாம் என்று நம்பலாம்.


— லிவிங்ஸ்ரன்

விளையாட்டு அரங்கம்




EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் கண்ணிவெடி அகற்றல்



பச்சிலைப்பள்ளி —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மைய நிறுவனங்களில் ஒன்றான மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நேற்று முன்தினம் பிற்பகல் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட நான்கு கிராமங்கள் கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

பளைப்பகுதியிலுள்ள பச்சிலைப்பள்ளி மண்டபத்தில் பிரதேச கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைச் செயலகத்தைச் சேர்ந்த அருள்நேசராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சி.சிவச்சிறி, என்.பி.ஏ நிறுவனத்தின் சார்பில் சார்ஸ் றிச்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சி.சிவச்சிறி, என்.பி.ஏ நிறுவனத்தின் சார்பில் சார்ஸ் றிச்பை ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனையடுத்து, கிராமங்கள் கையளிப்புக்கான சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவர்களிடம் கண்ணிவெடி அகற்றும் செயலகத்தைச் சார்ந்த விநாயகமூர்த்தி கையளித்தார்.

அரச படைகளின் நடவடிக்கைகள் காரணமாக இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தங்களது வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழந்த நிலையில், பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இந்தப் பிரதேசம் விடுவிக்கப்பட்டிருந்தும் கண்ணிவெடிகளின் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதில் பல சிரமங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும் தொடர்ந்தும் எதிர்நோக்கி வந்தனர்.

வண்ணாங்கேணி, தாமரைக்கேணி, தாமரைக்குளம், பளை ஆகிய கிராமங்களைக்கொண்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் மற்றும் எறிகணைகள் எனப் பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வெடிபொருட்கள் அகற்றப்பட்டு, பின்னர் அந்தக் கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி சந்திரன் சிறுவர் பாடசாலைக்கு யுனிசெவ் நிறுவனத்தால் தளபாடங்கள் வழங்கல்

கிளிநொச்சி —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையில் கிளிநொச்சி நகரில் அமையப் பெற்று நிர்வகிக்கப்பட்டுவரும் சந்திரன் சர்வதேச சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கான தளபாடங்கள் கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின் வன்னிப் பிராந்தியத் தலைவர் திருமதி. பெனிபூறுன் அவர்களால் வழங்கப்பட்டன.

ஆங்கில மொழிப் பாடசாலை ஒன்று அமையவேண்டுமென்ற வன்னி மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், கிளிநொச்சியில் ஓர் ஆங்கில மொழிப் பாடசாலை 2004ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பாடசாலையில் கடந்த 01.10.2005 அன்று சிறுவர் தின விழா நடைபெற்றபோது, பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின் வன்னிப் பிராந்தியத் தலைவர் திருமதி. பெனிபூறுன் மாணவர்களுக்கான தளபாடப் பற்றாக்குறை உள்ளதை அவதானித்து, தமது நிறுவனத்தின் மூலம் ஆவனசெய்து 21 மேசைகளையும், 81 கதிரைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.

## நினைவுக்கல் திரைநீக்கம்

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த 13.03.1997இல் கடற்படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருண் அல்லது அருணன் (சித்திரவேல் - சண்முகலிங்கம் சேனையூர் திருமலை தற்போதைய முகவரி அன்புத் திட்டம் புதுக்குடியிருப்பு) என்பவரது நினைவுக்கல் கடந்த வியாழக்கிழமை முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இவரின் தற்போதைய இல்லத்திலிருந்து உருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

## காணி வழங்குவதற்கான நேர்முக விசாரணை

கிளிநொச்சி —

கிளிநொச்சி நகர் பகுதியில் காணியற்ற அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையானது தெரிவுக்குழு மூலம் நடைபெறவுள்ளது.

இதற்கான நேர்முக விசாரணை எதிர்வரும் 7ஆம்திகதி கிளிநொச்சிச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர் - 30**

1883 : பால்ய விவாகத்தை எதிர்த்தவரும், விதவை மறுமணத்தை ஆதரித்தவருமான சுவாமி தயானந்த சரஸ்வதி ஆஜ்மீரில் காலமானார். விசம் கலந்த பாலை தனக்குக் கொடுத்த சமையற்காரனை மன்னித்ததுடன், அவன் நேபாளத்துக்குத் தப்பிச் செல்லப் பணமும் கொடுத்து உதவியவர் இவராவார்.

1911 : ஐந்தேவயது நிரம்பிய சீனச் சக்கரவர்த்தி பூ.யூ புதிய அரசியல் சட்டத்தை வெளியிட்டார். இதன்மூலம் முந்நூறு ஆண்டுகால மஞ்சு இனத்தவரது ஆதிக்கத்துக்கு சீனாவில் முடிவு கட்டப்பட்டது.

1913 : டிசம்பர் 31 ஆம் திகதிக்குமுன் தென்அல்பேனியாவைவிட்டு வெளியேறவேண்டும் என்று கிரீசுக்கு - ஒஸ்திரியாவும், இத்தாலியும் எச்சரிக்கை விடுத்தன.

1918 : ஒஸ்திரியா குடியரசு நாடானதாக அறிவித்தது.

1920 : போலந்தும் லிதுபேனியாவும் போர்நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

1922 : இத்தாலியில் இரத்தம் சிந்தாப்புரட்சி மூலம் முஸோலினி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்.

1925 : ஜோன் லோகி பெயர்ட் தான் கண்டுபிடித்த தொலைக்காட்சிப் பெட்டியை முதன் முதலாக இயக்கிக் காட்டினார். ஒரு சிறுவன் நடந்துசெல்லும் காட்சி ஒளிபரப்பிக் காட்டப்பட்டது.

1930 : சேர்.பொன்.இராமநாதன் காலமானார்.

1937 : உலகம் மூன்றே மூன்று விநாடி மணித்துளிகளில் தப்பிப் பிழைத்தது. ஐந்து லட்சம் தொன் எடைகொண்ட, விநாடிக்கு 297600 கிலோ மீற்றர் வேகத்தில் சுற்றிவரும் ஹெர்மாஸ் என்ற குறுங்கோள் ஒன்று எமது பூமிக்கு மிக அருகே வந்து சேர்ந்தது. அது தனது சுற்றுப்பாதையிலேயே அதிவேகத்தில் வந்திருந்தால் எமது வளிக்கோளத்தைப் பிளந்துகொண்டு வந்து பூமியைத் தாக்கி, சிதறச் செய்திருக்கும். எனினும், அதிசயமான வகையில் அது தனது சுற்றுப்பாதையில் இருந்து விலகிச் சென்றுவிட்டது. அப்பாடா... பூமி தப்பிவிட்டது.

1939 : பிரிட்டன், ஜேர்மனி அரசு யூதர்களை அழிக்க ஏற்படுத்திய "மரண முகாம்" பற்றிய விபரங்களையும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியது.

1941 : கடன் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ரஷ்யாவுக்கு நூறுகோடி டொலர்கள் பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களை அனுப்பிவைக்க அனுமதி அளித்தார்.

1956 : பிரிட்டனும் பிரான்ஸ்ஸும் இஸ்ரேலுக்கு எதிராக இறுதி எச்சரிக்கையை விடுத்தன.

1964 : மலையகத் தமிழரை நாடு கடத்திய சட்டமான சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தம் எழுதப்பட்டது.

1979 : இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் அணைகளைத் தகர்க்கப் பயன்பட்ட "துள்ளல் குண்டைக்" கண்டுபிடித்த பிரிட்டிஷைச் சேர்ந்த விமானப் பொறியியலாளர் "பார்னெஸ் நெவில் வாலிஸ்" மரணமானார்.

1981 : ரஷ்யா, வெனீரா - 13 என்ற விண்கலத்தை வெள்ளிக் கிரகத்தை நோக்கி அனுப்பியது. இதுவே வெள்ளிக் கிரகப்பரப்பின் வண்ணத் தொலைக்காட்சிப் படங்களை எடுத்தனுப்பியது.

1982 : போர்த்துக்கல்லில் எட்டு வருடகால இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. புதிய அரசியற்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

1985 : விண்வெளி ஆய்வு தலைமையகமான 61A, D1 சலஞ்சர் என்ற விண்ணாய்வு ஓடம் மருத்துவ மற்றும் அறிவியல் தொடர்பான 76 ஆய்வுகளை நடாத்தும் நோக்குடன் அமெரிக்காவால் ஏவப்பட்டது. எட்டு விண்வெளி வீரர்களுடன் வெளிநாடுகளது நிதிப்பங்களிப்போடு அனுப்பப்பட்ட முதலாவது விண் ஆய்வுக்கலம் இதுவாகும்.

1987 : லிபியாவில் இருந்து ஐரிஸ் குடியரசுப் படையினருக்கு ஆயுதங்களை ஏற்றிச்சென்ற கப்பல் பிரான்ஸால் இடைமறித்துக் கைப்பற்றப்பட்டது.

1991 : ஸ்பெயினின் மார்ரிக் நகரில் இஸ்ரேல், பாலஸ்தீனம், அரபு நாடுகளது அமைதிப் பேச்சு ஆரம்பமாகியது.

1994 : அமெரிக்காவுக்கு அனுப்புவதற்காக வைக்கப்பட்டிருந்த சுத்தப்படுத்தாத 160 தொன் யுரேனியத்தை ரஷ்யச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

1995 : சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் இருந்தும், அதன் பின்னணியிலுள்ள அரசியற் பொறியிலிருந்தும் விலகிக்கொள்ளும் விருப்போடு வலிகாம மக்களது வரலாற்று இடப்பெயர்வு இடம் பெற்றது.

தொகுப்பு-சந்துரு

## வடக்கு - கிழக்கு மனிதஉரிமை செயலகத்தில் முல்லைத்தீவு கல்வியியலாளருக்கான செயலமர்வு

முல்லைத்தீவு —

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய செயலமர்வு கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வு வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகப் பணிப்பாளர் அருட்தந்தை ம.சே.கருணாரட்ணம் அடிகளாரால் முல்லைத்தீவு மாவட்டக்கல்வி வலையத்தில் கடமை புரியும் அதிபர், ஆசிரியர்கள் உயர்நிலை உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு - மாவட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மனிதனின் அடிப்படை உரிமைகள், சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் பற்றியும், இவ்வுரிமைகள் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் அமைப்பாலும், ஏனைய உலகளாவிய அமைப்புக்களாலும், தனிப்பட்ட நாடுகளாலும் எவ்வளவு கூர்மையாகவும், தெளிவாகவும், இறுக்கமாகவும் சட்டங்கள் இயற்றப்பட்டு பிரகடனங்களும் வெளியிடப்பட்டுவருவது குறித்து இப்படியிருந்தும் காலத்துக்குக்காலம் அடிமட்டத்திலிருந்து உயர் மட்டம் வரையுள்ள சமூகங்களாலும், அரசுகளாலும் இந்த உரிமைகள் எந்தளவுக்கு மீறப்பட்டு வந்துள்ளன என்பதையும், யுத்த காலங்களில் அரசுகளாலும், நாடுகளிடையே காணப்படும் உள்ளூர் பிணக்குகளாலும் மனித உரிமைகள் கவனிப்பாரற்ற அநாதை நிலையில் விடப்படும் வேளைகளில் மக் கள் தாங்க முடியாத துயரங் களை அனுபவித்து வருகின்றா ர்கள் என்பதையும், குறிப்பாக இலங்கையில் எந்தெந்த விதங் களில் மனித உரிமைகள் மீறப் பட்டு வருகின்றன என்பதை யும், இந்த நிலையில் வட கிழக்கு மனித உரிமைகள் செய லகம் மனிதனின் பிறப்புரிமை, பேச்சுரிமை, அரசியலுரிமைக ளைப் பாதுகாப்பதில் ஆற்றிவரும் பணிகளையும், பொருத்தமான உதாரணங்களுடனும், கால அட்டவணைகளுடனும், வட கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பணிப்பாளரா கிய அருட்தந்தை ம.சே.கருணாரட்ணம் அடிகளார் நிகழ்த்திய விளக்க உரையில் துல்லியமாகக் காண்பித்திருந்தார்.

இந்த நிகழ்வு நல்ல பயனை அளித்துள்ளதாகக் கல்விச் சமூகம் பாராட்டுதல்களைத் தெரிவித்ததுடன், தம் சந்தேகங்களை கேள்விகள் மூலம் எழுப்பி தெளிவடைந்தனர்.

## இராமநாதபுரம் கிராமத்தில் பனம்விதை நடுகைத் திட்டம்

கிளிநொச்சி —

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் 10 இலட்சம் பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சி இராமநாதபுரம் மத்திய கிராமத்தில் பனம் விதை நடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திட்ட அலுவலர் இ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணா நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வன பனை - தென்னைவள அபிவிருத்தி இணைப்பாளர் இ.புவனேஸ் வரன் ஒழுங்குபடுத்தலில் 5000 பனம் விதைகள் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், மக்கள், மாதர் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

மக்கள் மூன்றுவிதம். செயற்படுபவர்கள்; செயற்பாடுகளைப் பார்ப்பவர்கள்; என்ன நடந்தது என்று அதிசயிப்பவர்கள்.

- ஜான் நியூபெர்ன்

## நமது நோக்கு

# சிறுமை கண்டு பொங்குவாய்...!

நேற்று முன்தினம் படையினரால் புத்தூர் பகுதியிலும் தாண்டிக்குளம் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள், சேடமிழுத்தபடி கிடக்கும் சமாதானத்தின் குரல்வளையை நெரித்து அதனை முற்றாக அழிக்கும் செயற்பாடுகளாகவே உள்ளன.

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலான 'சமாதான காலம்' இராணுவத்தினரின் தமிழ் மக்கள் மீதான அணுகுமுறைகளில், பார்வையில், மேலாதிக்கத்தன்மையில், மற்றும் பொதுவாகவே மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகளில் எந்தவிதமான ஆத்மார்த்தமானதும், அறிவு பூர்வமானதுமான மாற்றங்கள் எதனையும் தோற்றுவிக்கவில்லை என்ற செய்தியையே இன்றைய நாட்களின் நிகழ்வுகள் அழுத்தமாக சொல்வதாக உள்ளன.

இதற்கு இராணுவத்தரப்பினை மட்டும் விரல்சுட்டிக் குற்றம் சாட்டுவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை.

அவர்கள் வெறும் இனவாத விஷம் பூசப்பட்ட அம்புகள் மட்டுமே.

அவர்களை ஏவுபவர்கள் தென்பகுதியிலிருந்து நிறைவேற்று அதிகார ஆணவ பலத்துடன் செயற்பட்டுவரும் அரசியல்வாதிகளேயாவர்.

அவர்கள் ஆயுதப் படையினருக்குள் விதைத்துள்ள இனவாத வெறியானது, அவ்வப்போது தனது சுயத்தை வெளிப்படுத்த முனையும் போதே, புத்தூர் மற்றும் தாண்டிக்குளச் சம்பவம்போன்ற நிகழ்வுகள மூலம் தமிழ் மக்கள் மீது பேரினவாத அதிகார வெறியைத் திணிக்க முயல்கின்றன.

இது காலம்காலமாக நிகழ்ந்துவரும் - தமிழ் மக்களை அதிகம் பாதித்துவரும், பௌத்த சிங்கள அடக்கு முறையின் வெளிப்பாடுகளை அடையாளப்படுத்திவரும் சம்பவங்களேயாகும்.

-இவற்றை நிறுத்த படைத்தரப்பும் முயலப்போவது கிடையாது.

-இவற்றைக் கட்டுப்படுத்த அரசும் முன்வரப்போவதல்லை.

-காரணம், இரு தரப்பினரதும் இயல்பான சுபாவமெனபது தமிழ் மக்களை சீண்டி-துன்புறுத்தி - அவமதித்து - அடககி அழிப்பதென்பதாகிவிட்டது.

இல்லாவிடில், போரின் சகலவிதமான வடுக்களையும் ஏற்றுக்கொண்டு, இழப்புக்களைச் சந்தித்து, இடர் நிறைந்த வாழ்க்கையையே இந்த 'சமாதான காலம' என்ற நாட்களிலும் வாழ்ந்துவரும் அப்பாவி மக்கள் மீது குறிப்பாக பெணகள் மீது தமது பாலியல் வெறியைத் தீர்க்க முயல்வார்களா?

அடக்கு முறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் நீதி கோரி போராடுவோர் அடிப்படை மனித உரிமைகளை துப்பாக்கி முனையில் அடக்க முயல்வார்களா?

இதனைத்தான் பௌத்த சிங்கள சோஷலிஸ சிறிலங்கா குடியரசின் தார்மீகப் பண்பு என்றும் அடையாளப்படுத்துவார்களா? அப்படியென்றால் - நீதியற்ற - மனித உரிமைகளை மதிக்காத வெறிகொண்ட அரசு எப்போதும் மந்த புத்தியுள்ள, மனித நேயமற்ற படைகளுக்கு தலைமை தாங்குவதாகவே இருக்கும் என்ற சீன அறிஞரின் வார்த்தைகளுக்குச் சிறந்த உதாரணமாகவே சிறிலங்கா அரசும், படைகளும் உள்ளதாகக் கருதமுடியும்.

புத்தூர் சம்பவத்தின்போது பெண்கள் தனியாக வாழ்ந்து வந்த ஒரு வீட்டிற்குள் தீய நோக்குடன் நுழைந்த சிப்பாயின் செயலை வழமைபோல் அவர் மனநோயாளியென்றோ அல்லது வேறு காரணங்களைக் கூறியோ படையினர் சமாளிக்க முயலலாம்.

ஆனால், அதனை நம்பி மௌனம் காக்கும் அளவுக்கு தமிழ் மக்கள் இப்போது இல்லையென்ற உண்மையை அந்தச் சம்பவத்தினை அடுத்து மக்கள் காட்டிய எதிர்ப்புணர்ச்சி நிரூபித்துள்ளது.

இதேவேளை, மக்கள் மீதான படையினரின் துப்பாக்கிச் சூட்டு நடவடிக்கை அவர்களின் அடக்குமுறைக் குணாம்சத்தையே வெளிப்படுத்துவதாகவுள்ளது. தாண்டிக்குளத்திலும் இதே அணுகுமுறையையே படையினர் கையாள முனைந்துள்ளனர்.

இம்மாதிரியான அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுககும், தமிழ் மக்கள் மிரண்டுபோய் ஓடி ஒளிந்துகொண்ட காலம் மலையேறிவிட்டது.


அரசோ, பொலிஸோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ - தம்மீது படைத்தரப்பினால் இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுக்க தாமதித்தால் அல்லது தயக்கம் காட்டிப் பின்னடித்தால், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை, சாத்வீக ரீதியிலும் அதுதோற்றபின் ஆயுத ரீதியிலும் மேற்கொள்ளவேண்டிய காலத்தின் அவசியததை உணர்ந்து செயற்படத் தயாராகவுள்ளனர் என்ற செய்தியை அவர்கள் தமது எதிர்நடவடிக்கைகள் மூலம் உடனுக்குடன் உணர்த்தத் தொடங்கியுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

இதற்கு வன்முறையென்றோ, பயங்கரவாதமென்றோ பெயர்சூட்டி பிரசாரம் செய்ய அரசும் அதன் ஆதரவு சக்திகளும் தயாராக இருக்கக்கூடும். அதற்கு அஞ்சி, 'சிறுமை கண்டு பொங்கும்' பாரதி சொன்ன தமிழன் குணத்தை கைவிடுதல் என்பது இனிச் சாத்தியமில்லை.

அப்படி பொங்கு தமிழராக நாம் இயங்காவிட்டால் வரலாற்றில் நாம் நமது தனித்துவ முகவரியை இழந்தவர்களாகி விடுவோம்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இனியாவது நல்லதையே செய்து சங்கரியார் பிராயச்சித்தம் தேடலாம்!

நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே, நல்லாரோடிணங்கியிருப்பதுவும் நன்றே என்று ஔவைக் கிழவி பாடியதை சிறுவயதில் படித்ததாக நினைவு. இப்போது அது மறந்துபோய்விட்டது. மறந்தாலும் முன்னரென்றால் நமது குழந்தைகளாவது வீட்டில்இவற்றைச் சத்தம் போட்டுப் படித்துப் பாடமாக்கும்போது நமக்கும் ஞாபகம் வரும். இந்தக் காலத்தில் எந்தக் குழந்தையாவது நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நூல்களைப் படிக்கிறார்களா? இவர்கள் இவற்றைப் படிப்பதாக யாராவது கேள்விப்படுகிறார்களா? என்று கேட்டுக் கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன பழம் பாடல்களுக்குப் போய்விட்டீர்? ஔவை யாரைத் தெரியுமா? என்று சில வருடங்களுக்கு முன்னர் கேட்டிருந்தால் கே.பி.சுந்தராம்பாள் என்றாவது பதில் சொல்லியிருப்பார்கள், இன்று அதுவும் சொல்லும் நிலையில் இல்லை. இப்பொழுது பரீட்சையில் சித்தியடைவதற்குப் பள்ளிக் கூடப் பாடங்களை மீட்டல் வகுப்புக்கள் என்ற ரியூட்டரிகளில் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதை அப்படியே பரீட்சைகளில் எழுதிச் சித்தியடைகிறார்கள். சித்தியடைந்ததும் அவர்கள் படிக்கும் பள்ளிக் கூடத்துக்கும் வகுப்பு ஆசிரியருக்கும் பாராட்டுக் கிடைக்கிறது. இது மட்டுமல்ல, வகுப்பு ஆசிரியைகளுக்குப் பரிசும் கிடைக்கிறது. ரியூட்டரிகளுக்குப் பணம் கொடுப்பது பெற்றோர். அவர்களுக்குத்தான் தெரியும் தமது பிள்ளைகள் எப்படிச் சித்தி பெற்றார்கள் என்பது என்று நான் சொன்னேன்.

நான் எதையோ சொல்லவந்தேன். நீர் எங்கேயோ போய்வீட்டீர்? என்று பரமசிவம் அலுத்துக் கொண்டார்.

சரி நீர் சொல்லவந்ததைச் சொல்லும் என்று தூண்டிவிட்டேன்.

நல்லதையே நினைத்து, நல்லதையே பேசி, நல்லதையே செய்யவேண்டுமென்று போதிக்கும் நீதி நூல்கள் முன்னர் பள்ளிக் கூடங்களில் சிறுவயதிலேயெ பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. முன்பு பள்ளிக் கூட வாத்தியாராக இருந்த ஆனந்தசங்கரியார் இந்தப் பாடங்களைப் போதித்திராவிட்டாலும், பிள்ளைகள் படிக்கும் போதாவது கேட்டுத் தெரிந்திருப்பார். இதையெல்லாம்கூட அரசியல்வாதியாக வந்தபின் மறந்துவிடவேண்டுமா? எங்கெல்லாம், எவர் எவருக்கெல்லாமோ கடிதம் கடிதமாக எழுதி எழுதிப் பார்த்தார். வெளிநாடுகள் சிலவற்றுக்கு நேரிலும் சென்று சொல்லக் கிடைத்தவர்களுக்குச் சொல்லிப் பார்த்தார். பின்னர் நான் எதை எப்படிச் சொல்லியும் ஒருவரும் கேட்கிறார்களில்லையே என்று கவலையுடன் தனக்குத்தானே திருப்திப்படும்படியும் சொல்லிக்கொண்டார். இவர் எழுதிய கடிதங்களும் சந்தித்துச் சொன்னவைகளும் பத்திரிகை நிருபர்களைத் தேடிப் பிடித்துச் சொன்னவைகளும் தங்கள் வசதிக்கேற்ப வெளியிடப்பட்டவையேயொழிய இவருடைய நோக்கத்தை நிறைவேற்ற எவராலும் முடியவில்லை. எவரும் அதற்கு முயற்சி செய்யவுமில்லை. இவர் நல்ல விடயத்தை நல்ல நோக்கத்துடன் நல்ல மனதுடன் எழுதியும், பேசியும் இருந்தால் அவற்றுக்கு மதிப்பிருந்திருக்கும். விடுதலைப் புலிகளை ஒழிக்கவேண்டும்; அவர்களின் விடுதலைப் போராட்டம் வெற்றிபெறக் கூடாது. அவர்களுக்குக் கெட்டபெயர் உண்டாக்க வேண்டும்; தமிழ் மக்களுக்கு விடுதலைப் புலிகள் மூலம் விடுதலை கிடைக்கக்கூடாது என்ற கெட்ட நோக்கத்துடனேயே அவர் கடிதங்கள் எழுதினார். சந்திக்கக் கிடைத்தவர்களிடம் சொன்னார்; பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார். தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையானால் போதும் என்பது போல் சங்கரியார் நடந்தார். ஆனால், அவர் மூக்குடைபட்டு நிற்கிறார். கடைசியாக பெல்ஜியத்தில் நடைபெற்ற தமிழ் எழுச்சிப் பேரணியைத் தடுப்பதற்கும் கடிதங்கள் எழுதிப் பார்த்தார். அங்கு தமிழ் எழுச்சிப் பேரணி வெற்றிகரமாக நடந்து முடிந்தது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடை செய்திருப்பதாகச் செய்திகள் கொழும்பில் பெரிதுபடுத்தப்பட்டபின் புலிகளின் பிரதிநிதிகள் பெல்ஜிய அரசின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியுமிருந்தனர் என்று பரமசிவம் சொன்னார்.

நீர் சொல்வது சரிதான். அப்படியானால், சங்கரியாரை என்ன செய்யச் சொல்லுகிறீர்? அவருக்கு ஒரு வேலை வேண்டாமா? அவரால் எப்படிச் சும்மா இருக்கமுடியும் என்று கேட்டேன்.

நல்லது செய்ய நினைத்தால் எத்தனையோ வேலைகள் செய்யலாம். கெடுதியே நினைத்துக் கெடுதியைச் செய்ய நினைத்தால் எதுவும் செய்யமுடியாமல் போய்விடுகிறது. இலங்கைத் தீவு கடலால் சூழ்ந்திருக்கிறது. கடலில்தான் மீன்கள் விளைகின்றன. நமது மக்களின் தேவைக்குரிய மீன்களைத் தினமும் எடுத்துக் கொண்டு மிகுதி மீன்களை கருவாடு தயாரித்தால் நமது தேவைக்குப் போக, மிகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டுப் பணத்தையும் சம்பாதிக்கலாம். ஆனால், இன்று எமக்குத் தேவையான கருவாட்டில் தொண்ணூற்றைந்து சதவீதமான கருவாட்டை நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாக கருவாடு இறக்குமதி செய்யும் ஆர்.ஜி. (இன்ரநஷனல்) தனியார் கம்பனி இயக்குநர் ஜே.ஆர்.அந்தோனி தெரிவித்திருக்கிறார். மாதம் அறுநூறு மில்லியன் ரூபாய்களுக்கு கருவாடு இறக்குமதி செய்யப்படுகிறதாம். கருவாடு இறக்குமதிக்கு விதிக்கப்படும் தீர்வையைக் குறைத்தால், கருவாட்டின் விலையைக் குறைத்து மக்களுக்குக் கொடுக்கலாம் என்று அவர் சொல்லுகிறார் என்று பரமசிவம் சொன்னர்.

இதற்கு சங்கரியார் என்ன சொல்வது? அவரைக் கருவாட்டு வியாபாரம் செய்யச் சொல்லுகிறீரா என்று கேட்டேன்?

கருவாட்டு வியாபாரம் செய்யும்படி அவருக்கு நான் சொல்லவில்லை. அப்படிச் செய்தால்தான் என்ன? வாக்குக் கேட்டு வீடுவீடாகப் போகும்பொழுது கருவாடு போட்ட இடங்களிலெல்லாம் போகாமலா இருந்திருப்பார். நமது யாழ்.குடாநாடும் கடல் சூழ்ந்த பகுதிதான். இங்கும் மீன்பிடியே தொழிலாகக் கொண்ட மக்களும் நிறையப் பேர் வாழ்கிறார்கள். இவர்களின் மீன்பிடித் தொழில் சமீபத்தில் வந்த சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு இன்னமும் சரியான நிவாரண உதவி கிடைக்கவில்லை. அரசாங்கத்தோடு ஒத்தூதும் சங்கரியார் இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவும், மீன்பிடித் தொழிலை நவீனமயப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும் முடியும். கடற்றொழிலாளர்களோடு சேர்ந்து மீன்பிடித் தொழிலை நவீனமயப் படுத்தி மீன் விளைச்சலை அதிகரித்து, கருவாடு உற்பத்திக்கும் நவீன வசதிகளைப் பயன்படுத்தி உதவி செய்யலாம். மீன்பிடித் தொழிலில் மட்டுமல்ல, மலரப்போகும் தமிழீழத்தின் பொருளாதார விருத்திக்கு வேறு வழிகளிலும் உதவுவதற்கு சங்கரியார் தமது பங்கைச் செலுத்தலாம். இதன் மூலம் இதுவரை தமிழீழ விடுதலைக்குச் செய்த கெடுதிகளுக்குப் பிராயச்சித்தமும் தேடிக் கொள்ளலாம். ஏனெனில் சங்கரியார் இனி நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதியாகப் போகும் வாய்ப்பு தமிழர் தாயகத்தில் இருக்காதென்பது நிச்சயம் என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

தேர்தல் அறிக்கை ... சிலம்பு

# தேர்தல் அறிக்கைகளும் தமிழ்த் தேசியமும்




பகுதி -7

கியூபெக்கில் வாழும் பிரஞ்சு மொழிபேசும் மக்களின் உரிமைகள் பற்றிய கருத்துக் கணிப்பு கியூபெக்கிலே இடம் பெறுகின்றது. கிழக்கு திமோர் மக்களின் விருப்புப் பற்றி அறிய அங்குதான் கருத்துக்கணிப்பு இடம்பெற்றது. இவ்வாறுதான் பாதிக்கப்பட்ட மக் களின் கருத்தைக் கேட்கக் கருத்துக் கணிப்புகள் நடைபெறுவது இயல்பு. ஆனால், இங்கே மட்டும் இதற்கு விதிவிலக்கு வேண்டுமாம். தமிழ் மக்கள் எத்தகைய ஆட்சிவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்க முடியாது. சிங்கள மக்கள்- தமிழ் மக்களுடைய அரசியல் வாழ்வு இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானிப்பார்களாம். இதுதான் சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் நிலைப்பாடாகும். எனவே, ரணில் விக்கிரமசிங்கவும்சரி, மஹிந்த ராஜபக்ஷவும்சரி தமிழ் மக்களது உரிமைகளை வழங்கமாட்டார்கள் என்பதை மிகத் தெளிவாகத் தேர்தல் அறிக்கைகள் மூலம் காட்டியுள்ளார்கள்.

இதேநேரம் வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள மக்களைப் பற்றிய அக்கறைகளையும் தெளிவாகக் காட்டியுள்ளார் ரணில்.

"வடக்கு - கிழக்குச் சிங்கள மக்களுக்கு தமது தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பாக வாழ்வதற்கு, சொத்துக்களை வைத்துக்கொள்வதற்கு, வாழ்வுமுறைகளை மேற்கொள்வதற்கு, தமது நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துகிறேன்" என்று ரணில் தெரிவிக்கிறார். சிங்கள மக்களின் மேலுள்ள அக்கறைவரவேற்கத்தக்கதே. ஆனால் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழும் தமிழ்பேசும் மக்களைப்பற்றி இதுபோன்ற ஏதாவது கரிசனை தேர்தல் அறிக்கையில் சிறிதளவுகூடக் காணப்படவில்லை. இது எதனைக் காட்டுகிறது? சிங்கள மக்களின் பாதுகாவலன் தானே தான் என்பதைச் சொல்லாமல் சொல்லியுள்ளார் இதன்மூலம்.

மொத்தத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய தெளிவான தீர்வைக் காட்டாத தேர்தல் அறிக்கையே ரணிலினதும் அறிக்கையாகும்.

இதேநேரம் தமிழ் - முஸ்லிம் உறவைப் பலவீனப்படுத்தும் அம்சமும் அவரது தேர்தல் அறிக்கையில் காணப்படுகின்றது. முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் இணைந்தால் ஆபத்து என்பதை உணர்ந்த ரணில்- மிகவும் தந்திரமாக முஸ்லிம்களையும் - தமிழ் மக்களையும் பிரித்தாளும் சூழ்ச்சியில் நன்கு தனது நாட்டத்தைக் கொண்டுள்ளார்.

தமிழ் மக்களது உரிமைப் போராட்டம்தான் பேச்சுவார்த்தை மேசைக்கு இரு பகுதியினரும் வரவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது என்பதை மறைத்து, ரணில் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். தமிழ் - முஸ்லிம் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டதாலேயே போராட்டம் வெடித்தது. தமிழ் மக்களது உரிமைகளுடன் முஸ்லிம் மக்களுடைய உரிமைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்காமல் முஸ்லிம்களுக்கு உரிமைகள் வழங்க முடியும் என்பது கேலிக்கிடமானதுமாகும். தமிழர்களுடைய போராட்டம், முஸ்லிம் மக்களுடைய உரிமைகளுக்குமான போராட்டமே என்பதை எவரும் மறுக்க முடியாது. முஸ்லிம்களை அடிமைகளாக்குவதே போராட்டத்தின் நோக்கம் என்று முஸ்லிம் - தமிழ் உறவைக் குழப்புவதில் அக்கறையுள்ளோர் சிலர் கூறிவருகின்றனர். முஸ்லிம்களுக்குச் சுயாட்சி வழங்கத் தமிழ் மக்கள் விரும்பவில்லை என்னும் தவறான பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில்தான் தமிழர்களுக்கு என்ன தீர்வு என்று அறுதியிட்டுக்கூறாத ரணில் "முஸ்லிம்களுக்கான அரசியல் சுயாட்சி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உத்தரவாதப்படுத்தி வளப்பங்கீட்டுக்கும், நிர்வாக முறைமைக்கும் தேவையான வாய்ப்புகளை பாரபட்சமற்ற வகையில் சமத்துவமாகக் கிடைக்கச் செய்வேன்" என்று கூறுகின்றார். அரசியல் தீர்வை எந்த முறையில், எவ்வாறான அடிப்படையில் காண்பேன் எனக் கூறாத ரணில்- முஸ்லிம்களைப் பிரித்திடவும், அவர்களது வாக்கைக் கவரும் வித்திலும் இவ்வாறு குழப்பி, வாக்குறுதி கொடுத்துள்ளார்.

இதன்மூலம் தப்பான அர்த்தங்களை ஏற்படுத்தி தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை உண்டாக்குவதே ரணிலின் நோக்கமாகும்.

இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைபற்றித் தெளிவில்லாத நிலையில் உள்ள ரணில், பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி, 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீன ஆயுதப் படையை உருவாக்குவதை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதற்கான அறிக்கை தயாரிக்கப்படும்வரை ஆறு படையணிகளை ஒன்றிணைத்துப் புதிய படையணி நிறுவப்படும் என்கிறார். இது முழுமையான யுத்தத் தயார்படுத்தலேயாகும். அல்லாவிட்டால் இவ்வாறு பாரிய நிதி ஒதுக்கி, நவீன படையணியை எதற்காகத் தயாரிக்க வேண்டும். இதிலே மஹிந்த ராஜபக்ஷவும், ரணிலும் மிக நன்றாக ஒரே கொள்கையைக் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதில் படைத்துறையினரையே இவ்விருவரும் அதிகம் நம்பியுள்ளனர் என்பதைத் தேர்தல் அறிக்கைமூலம் வெளிக்காட்டியுள்ளனர். (தொடரும்...)

அரசியற்கட்டுரை... - கனகரவி -



“ஈழத்தமிழரைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளில் பேரினவாதிகள் ஈடுபட்டு வந்தமையாலேயே அகிம்சை ரீதியாகவும், ஆயுதமேந்தியும் ஈழத்தமிழர் போராடி வருகின்றனர். இதனைச் சிங்கள பேரினவாத அரசுகள் புரிந்தும், புரி யாதவர்களாயிருந்து வருவதனால்தான், சர்வதேச சமூகத்திடம் ஈழத் தமிழர்கள் நீதிகேட்கின்றனர். இதனைச் சர்வதேச சமூகத்தினர் கவனத்திலெடுக்க வேண்டும்.”

# தடைகளைத் தாண்டி பொங்கியெழும் தமிழ்த்தேசிய உணர்வு எழுச்சி...

பயத்தை உடைத்தெறிந்து பேரெழுச்சியுடன் வவுனியா நகரசபை மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து, தமிழ்த்தேசிய எழுச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

பல்வேறான அச்சுறுத்தலையும் மீறி, பெருவெற்றியுடன் இந்த எழுச்சியில் மக்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்கும் நோக்கத்துடன், 26/10/2005 அன்று மாலை பூங்காவீதியில் இயங்கி வந்த தமிழ்த் தேசிய எழுச்சி செயலணியின் அலுவலகத்துக்கு அருகாமையில் கைக்குண்டொன்று எறியப்பட்டது. முன்னைய காலங்களில் என்றால், குண்டொன்று வெடித்தால் அந்த இடத்துக்கு மக்கள் வர அஞ்சுவார்கள். இப்பொழுது குண்டு வெடித்த இடத்தில் இருந்து ஓடாது அதனைப் பார்ப்பதற்குக் கூடுதலானவர்கள் வந்ததைக் காண முடிந்தது. அத்துடன் சாதாரணமாக நடந்து முடிய வேண்டிய நிகழ்வுக்கான வெளிப்படுத்துகை அதிகமாகியது. இதனை அவதானிக்கிறபோது - உரிமை கேட்டு எழுகின்ற மக்களின் உணர்வை இத்தகைய சம்பவங்களை அதிகரிக்க வைப்பதாகவே தெரிகின்றது. கடுமையான கட்டுப்பாடு, அதனையும் தாண்டிய கட்டுமீறலை ஏற்படுத்தும்.

ஈழத்தமிழரைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளில் பேரினவாதிகள் ஈடுபட்டு வந்தமையாலேயே அகிம்சை ரீதியாகவும், ஆயுதமேந்தியும் ஈழத் தமிழர் போராடி வருகின்றனர். இதனைச் சிங்கள பேரினவாத அரசுகள் புரிந்தும், புரியாதவர்களாயிருந்து வருவதனால்தான், சர்வதேச சமூகத்திடம் ஈழத்தமிழர்கள் நீதி கேட்கின்றனர். இதனைச் சர்வதேச சமூகத்தினர் கவனத்திலெடுக்க வேண்டும். இது தொடர்பாக கவனமெடுக்க வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு. தம்மைத் தாமே ஆண்டு வந்த தமிழரின் ஆட்சியதிகாரங்களை ஒழித்து, தமது மேலாதிக்கத்தை செலுத்துவதில் வேறுபட்ட ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தி, சுதந்திரமென்ற பெயருடன் வெள்ளையர்கள் கையகப்படுத்தி வைத்திருந்த நாடுகளை கைவிட்டு போகின்றபோது, சிறுபான்மையினரின் உரிமைகளை கவனிக்கத் தவறினர் என்பது மெய்யாகும். இந்த நிலைமையினால் சிறுபான்மையினரை பேரினவாதிகள் ஒடுக்க நினைத்து செயற்பட்டதை எதிர்த்த போது, அதனை பயங்கரவாத செயலென பேரினவாதிகள் பரப்புரை செய்தனர். அடிப்படை உண்மைகளை சர்வதேச சமூகத்தினர் புரிந்திருந்தபோதும், அரசு என்று நோக்கினரே தவிர வேறெதுவுமில்லை. ஆகவே, தமிழ்த்தேசிய எழுச்சி என ஈழத் தமிழர் கிளர்ந்தெழுவதை என்ன காரணத்துக்காகச் செய்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதனைக் கவனத்திலெடுத்து இலங்கைத் தீவில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுதான் இன்று சர்வதேச சமூகத்தை நோக்கிய ஈழத்தமிழரின் கோரிக்கையாகும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதற்கமைய மக்கள் ஓரணியில் அணிதிரளத் தொடங்கிவிட்டனர். இது மக்களெழுச்சி, மக்கள் போராட்டம். இதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவில்லையெனின், அவர்கள் மனித நேயம் பற்றி அறிக்கை விடுவது, பேசுவதெல்லாம் பொய்யுரையெனத்தான் சொல்ல வேண்டியுள்ளது.

வவுனியா தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் மாணவர்களைக் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாதென வன்னிக்கான படைத்தளபதி - வவுனியா மாவட்ட பாடசாலைகளின் அதிபர்களை சந்தித்து வலியுறுத்தியிருந்தார். ஆனால் நிகழ்வில் மாணவர்கள் கலந்து கொள்வதை எவராலும் தடுக்க முடியவில்லை.

அத்துடன், மாணவர்களை இப்படியான போராட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாதெனக் கூறும் படை உயரதிகாரிகள் எத்தனை பாடசாலை மாணவர்களைக் கொன்றமை, அவயவங்களை இழக்கச் செய்தமை, கற்க முடியாத சூழலை ஏற்படுத்தியமை, கற்றலுபகரணங்களை மாணவர்கள் எடுத்துச் சென்றபோது தடுத்தமை, இன்றும் உயர் பாதுகாப்பு வலயமென பல பாடசாலைகளில் முகாமமைத்துக் குந்தியிருக்கின்றமை போன்ற ஏராளமான துன்பங்களை மாணவர்களுக்கு ஏற்படுத்திய, ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற படையதிகாரிகள் - என்ன காரணம் கூறியும், மாணவர் களின் எழுச்சியை தடுக்க முடியாதென்பதை வவுனியாவில் மாணவர்கள் வெளிப்படுத்தினர்.

இந்த மாதிரியான நிகழ்வுகளில் எழுச்சியுடன் கலந்து கொள்ளும் மக்கள், தாம் பட்ட துன்பங்கள் போதும். இனியும் துன்பத்தை அனுபவிக்க முடியாது என்ற செய்தியையே வெளிப்படுத்துகின்றனர். இந்த மொழி விளங்கவில்லையெனின், நோயைக் குணப்படுத்த கசப்பான குளிசையினை அல்லது ஊசியைப் போடுகின்றபோது, சிறு துன்பமொன்று உள்ளது. அதேபோல நிரந்தர அமைதியை, நிம்மதியான வாழ்வினை, சுதந்திரத்தை, பெறுவதற்கு மீண்டும் துன்பத்தை அனுபவிக்கவும் தயார் என்ற செய்தியைத் தெரிவிப்பதாகவே இந்த மாதிரியான மக்களெழுச்சிகளை உணரவேண்டியுள்ளது. சமகாலத்திலேயே இன்னுமொரு வரலாற்றுக் கடமை என்ற வேலைத்திட்டத்துக்கும் மக்கள் ஆதரவு கொடுக்கின்றனர். அதென்னவெனில் - மக்கள் கிராமியப்படை, துணைப் படையென பயிற்சி எடுப்பதாகும். ஆகவே... துணிந்து விட்ட ஈழத்தமிழரின் உணர்வைப் புரிந்து கொள்ளவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்தினருக்கு உள்ளது. இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் அரச பயங்கரவாத செயலுக்கு முண்டு கொடுத்து, ஈழத் தமிழரை அழிப்பதற்கு வழிவகை செய்வதை யாவது நிறுத்தினால், ஈழத்தமிழர் தமது துன்பத்தைத் தாமே தீர்த்துக்கொள்வார்கள். அதற்கான மனோபலம் ஈழத்தமிழரிடம் உள்ளது.


“பீனிக்ஸ்” பறவை போல சாம்பல் மேட்டிலிருந்து மீண்டெழுவோம் என வீறாப்புடன் போரிட்டுவரும் ஈழத்தமிழ் மக்கள் ஒன்றாக, ஒரு கொடியின் கீழ் எழுச்சி கொண்டதன் ஓர் அங்கமாகவே தமிழ் தேசிய எழுச்சி நாளில் மக்கள் அணி திரள்கின்றனர்.

27/07/2005 அன்று வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்காவில், தமிழர் தாயகம் எங்குமிருந்து வந்த பேராளர்களின் ஒருமித்த குரலில் செய்யப்பட்ட பிரகடனத்தை வலியுறுத்தியே, தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்று வருகின்றபோது, அதன் முக்கிய அங்கமாகவே வவுனியாவிலும் இந்த நிகழ்வு செய்யப்பட்டது. இது மக்கள் எழுச்சிப் போராட்டம். இதனை எந்தமாதிரியான செயற்பாட்டின் மூலமும் எவ்வாறு தடுக்க முடியாதோ, அதே போன்றே மறைத்து விடவும் முடியாது.

பேரின வாதிகள் மாறிமாறி சிறிலங்காவின் ஆட்சி உயர் பீடங்களை வெவ்வேறு இரு பெரும் கட்சிகள் கைப்பற்றிய போதும், அவர்களின் நேர்மையற்ற அரசியல் செயல்பாட்டால் ஏற்பட்ட அரசியல் வீழ்ச்சி அல்லது வங்குரோத்தை சீர் செய்ய ஊறுகாயைத் தொடுவது போன்று, ஈழத்தமிழரின் பிரச்சினையை எடுக்கின்றனர். இயலாதவிடத்து சமாதானம் என்ற மகுடத்தைச் சூடி - ஒரு கையில் வெண்புறாவையும், மறுகையில் கொடும் ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு கோரத்தை மறைக்க நீட்டும் வெண்புறாவின் கழுத்திலும் குருதி வழிவதையே காணமுடிவதனால், தமிழரின் துணிவை மக்கள் எழுச்சி மூலம் காண்பிக்கின்றனர். இதனைக் கருத்திலெடுக்காதபோது மக்களின் துணிவு வேறு திசை நோக்கிப்போவதை எவரும் தடுக்க முடியாது.

அமைதி வழியில், அமைதியாயிருக்கப் போராடுவதை... வன்முறையின்மூலம் தடுக்க முற்பட்டால், வன்முறையை வன் முறையால் எதிர்த்து நிமிர்வதைத்தவிரவேறுவழியேஇல்லையென்ற நிலை, ஈழத் தமிழருக்கு ஏற்படக்கூடாது என்பதே தமிழ்த் தேசிய எழுச்சி என்ற மக்கள் போராட்டம் உணர்த்தி நிற்கும் செய்தியுமாகும்.

# ஆந்திராவில் கோர ரயில் விபத்து; 200 பயணிகள் பலி, 100 பேர் காயம்!



ஹைதராபாத் —

ஆந்திராவில் ரயில் கவிழ்ந்து ஆற்றில் விழுந்தது. இதில் 200 பயணிகள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆந்திராவில் புயல் தாக்கியதால் 2 நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் ஏரிகள், அணைகள் நிரம்பி வழிகின்றன. அணை உடைப்பைத் தடுக்க தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் வெளியேறிய நீர் ஊருக்குள் புகுந்ததால் ரயில் தண்டவாளங்கள் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில் செகந்திராபாத்திலிருந்து ரேபள்ளி செல்லும் பயணிகள் ரயில் நேற்றுக் காலை 5 மணியளவில் ராமணா பேட்டை அருகே வந்தது. அப்போது ஒரு ஆற்றுப் பாலத்தில் திடீரென தடம்புரண்டது. இதனால் 10 பெட்டிகள் ஆற்றில் விழுந்ததில் அதில் இருந்த பயணிகள நீரில் மூழ்கினர்.

முதல் தகவல்படி 10 பேர் இறந்ததாகத் தெரிய வந்தது. ஆனால், அந்தப் பெட்டிகளில் இருந்த 100 இற்கும் மேற்பட்டவர்களும் ஆற்றில் மூழ்கியதால் உயிரிழப்பு 200 ஐ தாண்டியிருக்கும் என அஞ்சப்படுகிறது. விபத்துக் குறித்து அறிந்ததும் உள்ளூர் மக்கள் விரைந்து தண்ணீரில் தத்தளித்தவர்களை மீட்டனர்.

ஏராளமானவர்கள் ஆற்றில் குதித்துத் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டவர்களைத் தேடி வருகின்றனர். ஆற்றில் ரயில் விழுந்ததில் உயிர் தப்பியவர்களும் மரத்தைப் பிடித்தபடி கிளைகளில் அமர்ந்திருந்தனர். அவர்களை உள்ளூர் மக்கள் மீட்டனர்.

ஹைதராபாத் மற்றும் பல இடங்களிலிருந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்தனர். இராணுவம் மற்றும் கடற்படையினரும் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். குண்டூர் - செகந்திராபாத் இடையே ரயில் சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் சிக்கித்தவிக்கும் மக்களை அங்கிருந்து அழைத்துவர பேரூந்துகள் அனுப்பப்பட்டன. ஆனால், வெள்ளம் காரணமாக அந்தப் பகுதிக்குப் பேரூந்துகள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

ரயில் விபத்தில் சிக்கியவர்கள் வெள்ளத்தில் தத்தளித்தனர். மேலும் ரயில் கூரைகளிலும் பயணிகள் அமர்ந்துள்ளனர். அவர்களை மீட்பதற்குக் ஹெலிகொப்டர் உதவி நாடப்பட்டுள்ளது. மேலும் பயணிகளை மீட்பதற்கு 6 படகுகளும் அனுப்பப்பட்டுள்ளன.

விபத்து நடந்தபோது அதிகாலை 4.30 மணி என்றும் பயணிகள் அனைவருமே தூங்கிக்கொண்டு இருந்தனர் என்றும் உயிர் தப்பியவர்கள் கூறினர்.




## பிக்பென் கடிகாரம் பழுதடைந்தது

லண்டன் —

உலகிலேயே மிகப்பெரிய கடிகாரம் லண்டனில் உள்ள பிக்பென் கடிகாரம். நாடாளுமன்றத்தின் பொதுச்சபைக் கட்டடத்தில் உள்ள ஸ்ரீபன் கோபுரத்தில் இந்தக் கடிகாரம் உள்ளது.

உலகப் புகழ்பெற்ற இந்த பிக்பென் கடிகாரம் தட்பவெட்ப நிலை மாற்றம் காரணமாகப் பழுதடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து அந்த மிகப்பெரிய கடிகாரத்தை கீழே இறக்கி பொறியியலாளர்கள் பழுதுபார்த்துவருகின்றனர். இன்று மாலை இந்தக் கடிகாரம் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் கோபுரத்தின் உச்சியில் பொருத்தப்படும்.

பழுதடைந்த பாகங்களை நீக்கிவிட்டு புதிய பாகங்கள் பொருத்தப்படும். முன்பு இதேபோல் 20 ஆண்டுகளுக்கு முன்பு பிக்பென் கடிகாரம் கீழே இறக்கப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புதுடெல்கியில் தொடர் குண்டுவெடிப்பு; 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!



புதுடெல்கி —

இந்திய தலைநகர் புதுடெல்கியில் நேற்று மாலை இடம்பெற்ற மூன்று வெவ்வேறான குண்டுவெடிப்புக்களில் 100 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் 80 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

முதல் இரண்டு குண்டுவெடிப்புகளும் புதுடெல்கியின் மத்திய மற்றும் தென்பகுதியில் மிகவும் சனத்திரள் நிறைந்த சந்தைப் பகுதியில் முறையே 5.30, 6.00 மணிக்கு இடம்பெற்றது. மூன்றாவது குண்டுவெடிப்பு 6.05 மணிக்கு கோவில்பூரி என்னும் இடத்தில் பஸ் ஒன்றில் இடம்பெற்றது.

இந்தக் குண்டுவெடிப்பில் பெருமளவான உயிரிழப்பு தென்பகுதியில் உள்ள சரோஜினி நகர் சந்தைப் பகுதியிலேயே ஏற்பட்டதாகவும் இந்தச் சம்பவங்களில் காயமடைந்த 80 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்களை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வன்மையாகக் கண்டித்துள்ளார். பொதுமக்கள் அமைதியைக் கடைப்பிடிக்கும்படியும் கிளர்ச்சிவாதிகளின் வன்செயலைப் பொறுத்துக்கொள்ளமுடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து உள்துறை அமைச்சு பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிகளுடனான அவசரக கூட்டம் ஒன்றை நடத்தியதுடன் பெரு நகரங்களில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடுமாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களை லக்சர் இ.தொய்பா என்ற இஸ்லாமிய அமைப்பே நடத்தியிருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல்களை பாகிஸ்தான் வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் மக்கள் செறிந்திருந்த சந்தைப் பகுதியில் நடத்தப்பட்டமையானது பயங்கரவாதிகளின் குற்றவியல் நடவடிக்கையையே எடுத்துக்காட்டுவதுடன் அப்பாவி மக்களின் உயிர்களும் பறிக்கப்பட்டுவிட்டதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பூமிக்கு அருகில் வந்த செவ்வாய் கிரகம்!

சென்னை —

பூமியிலிருந்து செவ்வாய் கிரகம் 35 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. சூரியனை மையமாகக்கொண்டு சுற்றிவரும் கிரகங்களின் 4 ஆவது சுற்றுப் பாதையில் செவ்வாய் சுழன்று வருகிறது. இது பூமியைவிட சிறியதாகும்.

செவ்வாய் கிரகம் தன் சுற்றுப்பாதையில் வரும்போது எப்போதாவது பூமியை நெருங்குவதுண்டு. கடைசியாக கடந்த 2003 ஆம் ஆண்டு அது பூமிக்கருகில் வந்தது. அதன்பின்னர் நேற்று பூமிக்கு அருகே 5 கோடியே 90 லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் வந்தது.


நேற்று முதல் 3 நாட்களுக்கு செவ்வாய் கிரகத்தை தெளிவாகக் காணலாம். மேலும் 2 மாதத்துக்கு இதைப் பார்க்கமுடியும்.


இதற்கிடையே செவ்வாய் கிரகம் பூமியை நெருங்கிவருவது பூமிக்கு நல்லதல்ல. பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் என்று 2 சோதிடர்கள் எச்சரித்துள்ளனர். பொதுவாக செவ்வாய் கிரகத்துக்கு மேற்கு நாடுகளில் ரோமன் யுத்த கடவுள் என்று சொல்வதுண்டு.

ஆனால், இது அழிவுதரும் கிரகம் என்று சோதிடர்கள் தெரிவித்துள்ளனர். வழக்கமாக செவ்வாய் - பூமியை நெருங்கும்போது 45 நாட்களுக்கு அருகில் வந்துவிட்டு பிறகு விலகிச் சென்றுவிடும்.

இந்தத் தடவை 6 மாதத்துக்கு பூமிக்கு மிக அருகில் செவ்வாய் கிரகம் சஞ்சரிக்கும். இது பெரும் அழிவை உண்டாக்கும் என சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

### நேற்று இரவு ஒளிர்ந்த செவ்வாய்




செவ்வாய் கோள் பூமியை நெருங்கி வந்துள்ளதால் நேற்று இரவு விண்ணில் மாணிக்கக் கல் போல பிரகாசமாக அது காட்சியளித்தது. எதிர்வரும் 13 ஆண்டுகளில் இதுபோன்ற பிரகாசமான செவ்வாயைப் பார்க்க வாய்ப்பில்லை என்று வானியல் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சூரியன் மறைந்த பின் கிழக்கு வானிலிருந்து மெதுவாக மேல்நோக்கி செவ்வாய் நகர்ந்துள்ளது. கடந்த 2003 இல் செவ்வாய் மற்றும் பூமிக்கோள்கள் அருகருகே வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டிகையை முன்னிட்டு
விஷேட வெகுமதி

என்றும் பயணத்தின் உதவியாளன்

DAIDO

52,900.00

CF 90C 4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.



ஏக முகவர்
செரெண்டிப் மோட்டர் என்ரபிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 0112-341580, 0112-341581
பக்ஸ்: 0112-454608 E.mail: zme@slt.lk

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ராணுவம், பொலிஸாருக்குள் பிரசாரம்

## 3 சிரேஷ்ட அதிகாரிகள் மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்குமாறு இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்புக்களில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறைப்பாடு செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான இரு மேஜர் ஜெனரல்கள் மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவர் ஆகியோரின் செயற்பாடுகள் குறித்து முழுமையான அறிக்கையொன்றினை கையளிக்க முடிவு செய்துள்ளதாக கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் தேர்தல் சமயத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளை மீறியதுடன் தேர்தல் சட்ட விதிகளையும் மீறி இந்த மூன்று அதிகாரிகளும் நடந்துகொள்வதாக இந்த முறைப்பாட்டில் ஐ.தே.க. தெரிவிக்கவுள்ளது.

ராஜபக்ஷவின் சார்பில் இராணுவத்திற்குள்ளும், வட - கிழக்கிலிருக்கும் பொலிஸாருக்கும் செயற்படுத்தவிருந்த திட்டங்கள், அதற்கென பயன்படுத்தவிருந்த இராணுவ ட்ரக் வண்டிகள், ஜீப் மற்றும் திணைக்களகத்திற்குச் சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்களையும் அம்மனுவில் தெரிவிக்கவுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இதனிடையே தேர்தல் விதிகளை மீறும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உடனடிநடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

எந்தவொரு அதிகாரியும் தேர்தல் சட்டத்தை மீறுவாராயின் அது குறித்து தேசிய ஆணைக்குழுவின் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவிற்கு தொலைபேசியூடாக அறிவிப்பதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் கிடைத்ததும் அவற்றை விசாரணை செய்து உரிய அதிகாரிகளுக்குத் தேவையான உத்தரவுகளை உடனடியாக வழங்கி தவறுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்து ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பண்ணைப் பாலம் புனரமைக்கப்பட்ட பின்னர், பொது மக்கள் பாவனைக்காக நேற்று நண்பகல் முதல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் திட்டப் பொறியியலாளர் மு.தில்லைநாதன் தெரிவித்தார்.

யாழ்.பண்ணைப்பால புனரமைப்பு பணிகள் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்தபோதும், பயணிகளின் நன்மை கருதி சிறப்பு படகு சேவைகள் நடைபெற்றன. பண்ணைப்பாலத்தின் பிரதான புனரமைப்பு வேலைகள் அனைத்தும் நேற்றுக்காலை முடிவடைந்ததை யடுத்து நண்பகலளவில் புனரமைக்கப்பட்ட பாலத்தினால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாலையில் பஸ்களும், பாலத்தினூடாகப் போக்குவரத்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இதையடுத்து இன்றுமுதல் சிறப்பு படகு சேவை நடத்தப்படமாட்டாது எனவும் பொதுமக்கள் மேற்படி பாலத்தினால் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும். வாகனங்கள் பாலத்தினூடாக செல்லும்போது பால வேலைகள் முழுமையாக முடியும் வரை மிகக்குறைந்த வேகத்தில் செல்லுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

### படையினரின்...

அரச நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு சோககீதம் இசைப்பதுடன், துக்கதினமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

